# பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு
## 2018–2019

## மானியக் கோரிக்கை எண். 9

**சீ. வளர்மதி**
பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர்

©
தமிழ்நாடு அரசு
2018

# பொருளடக்கம்


| வரிசை எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1. | முன்னுரை | 1 |
| 2. | இடஒதுக்கீடு | 3 |
| 3. | கல்வி | 6 |
| 4. | கல்வி உதவித்தொகைத் திட்டங்கள் | 7 |
| 5. | இலவசக் கல்வி | 13 |
| 6. | மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சார்ந்த கிராமப்புற பள்ளி மாணவியருக்கு ஊக்கத்தொகை வழங்குதல் | 19 |
| 7. | விடுதிகள் | 20 |
| 8. | அரசால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் விடுதிகளுக்கு உணவு மானியம் | 27 |
| 9. | சிறந்த காப்பாளர்கள் / காப்பாளினிகளுக்கு மாநில அளவிலான விருதுகள் வழங்குதல் | 28 |
| 10. | விடுதிகளுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டுதல் | 29 |
| 11. | கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள் | 31 |
| 12. | சீருடைகள் | 34 |

| வரிசை எண் | பொருள் | பக்கம் |
| --- | --- | --- |
| 13. | மிதிவண்டிகள் வழங்கும் திட்டம் | 36 |
| 14. | பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள் | 37 |
| 15. | நல வாரியங்கள் | 39 |
| 16. | வன்னியர் பொதுச் சொத்து நல வாரியம் | 47 |
| 17. | சமூக நீதிக்கான பெரியார் விருது | 47 |
| 18. | தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் | 48 |
| 19. | தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் | 53 |
| 20. | சிறுபான்மையினர் நலன் | 56 |
| 21. | தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையம் | 71 |
| 22. | தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் | 72 |
| 23. | தமிழ்நாடு வக்ஃப் வாரியம் | 78 |
| 24. | தமிழ்நாடு மாநில ஹஜ் குழு | 82 |
| 25. | இணைப்பு | 88 |

# பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை

## மானியக் கோரிக்கை எண். 9

## கொள்கை விளக்கக் குறிப்பு

## 2018–2019

**முன்னுரை**

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் சமூக நிலையில் உயர்வடையவும், பொருளாதாரத்தில் மேம்பாடு அடையவும், கல்வியில் வளர்ச்சியடையவும், பல்வேறு சிறப்பான நலத்திட்டங்களை வகுத்து, அவற்றை செயல்படுத்துவதில் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாக திகழ்ந்து வருகிறது. மக்களிடையே ஏற்றத் தாழ்வுகளை களைந்து சமநிலையை ஏற்படுத்துவதற்கு இவ்வரசு அதிக முக்கியத்துவம் அளித்து பல்வேறு நலத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. சமூக பொருளாதார மேம்பாட்டிற்கு கல்வியே முதன்மையானது என்பதால் மாணவ / மாணவியருக்கு கல்வி உதவித்தொகை

வழங்குதல், ஊக்கத்தொகை வழங்குதல், மிதிவண்டி வழங்குதல், விடுதி வசதி ஏற்படுத்தித் தருதல், பிரமலைக் கள்ளர் இனத்தவரின் கல்வி மேம்பாட்டிற்காக கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளை நடத்துதல் போன்ற பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. மேலும், பொருளாதாரத்தில் முன்னேற்றம் அடைய ஏதுவாக தையல் இயந்திரங்கள், சலவைப்பெட்டிகள், வீட்டுமனைகள் வழங்குதல், தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் மற்றும் தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் ஆகியவற்றின் மூலம் கடனுதவி வழங்குதல் ஆகிய திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. இத்துறையின் கீழ் செயல்படும் சீர்மரபினர் நல வாரியம், தமிழ்நாடு நரிக்குறவர் நல வாரியம் மற்றும் உலமாக்கள் மற்றும் இதர பணியாளர்கள் நல வாரியம் ஆகிய வாரியங்கள் மூலம் இவ்வாரியங்களில் பதிவு செய்துள்ள உறுப்பினர்களுக்கு நல உதவிகள் வழங்கப்படுகின்றன. வக்ஃப் சொத்துக்களை சரியான முறையில் பராமரிப்பதற்காகவும் மற்றும் பாதுகாப்பதற்காகவும், வக்ஃப் தொடர்பான அலுவல்களை நிர்வகிப்பதற்காகவும் தமிழ்நாடு வக்ஃப் வாரியம் செயல்பட்டு வருகிறது. ஹஜ் புனித

பயணத்திற்கான உதவிகள், ஜெருசலேம் புனிதப் பயணத்திற்கான நிதி உதவி வழங்குதல் மற்றும் உலமாக்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டங்களை அரசு செயல்படுத்தி வருகிறது.

## 2. இடஒதுக்கீடு

அரசு பணிகளில் நியமனங்கள் மற்றும் கல்வி நிலையங்களில் மாணவ, மாணவியர் சேர்க்கை ஆகியவற்றிற்கான இடஒதுக்கீடு கொள்கையை செயல்படுத்துவதில் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாக திகழ்கிறது. இடஒதுக்கீடு கொள்கை தமிழ்நாட்டில் 1921 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இட ஒதுக்கீடு நற்பயனை விளைவித்துள்ளதோடு, இவ்வகுப்புகளின் சமூக, பொருளாதார, கல்வி முன்னேற்றத்திற்கு கணிசமாக பங்களித்துள்ளது. தமிழ்நாட்டின் மொத்த மக்கள் தொகையில் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையின மக்கள் மூன்றில் இரண்டு பங்கிற்கும் மேல் இருப்பதால், அவர்களுக்கான இடஒதுக்கீட்டின் அளவு படிப்படியாக உயர்த்தப்பட்டு

தற்போது ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான இடஒதுக்கீட்டினையும் சேர்த்து **69** விழுக்காடு இடஒதுக்கீடு கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது**.** அதன் விபரம் பின்வருமாறு:-

| **வ. எண்.** | **பிரிவு** | **இடஒதுக்கீடு விழுக்காடு** |
|---|---|---|
| 1. | பிற்படுத்தப்பட்டோர் | **26.5** |
| 2. | பிற்படுத்தப்பட்ட வகுப்பு முஸ்லிம்கள் | **3.5** |
| 3. | மிகப் பிற்படுத்தப்பட்டோர் / சீர்மரபினர் | **20** |
| 4. | ஆதிதிராவிடர் | **18** |
| 5. | பழங்குடியினர் | **1** |
| **மொத்தம்** | | **69** |

இந்திரா சஹானி எதிர் மைய அரசு வழக்கில் **(**மண்டல் குழு வழக்குகள்**)** இடஒதுக்கீடு **50** விழுக்காட்டிற்கு மிகக்கூடாது என்று இந்திய உச்சநீதிமன்ற அரசமைப்பு நீதியர் ஆயம் தீர்ப்பு அளித்ததால், **69** விழுக்காடு இடஒதுக்கீட்டினை தொடர்ந்து செயல்படுத்தும் பொருட்டு **1993** ஆம் ஆண்டு தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்களுக்கு **(**கல்வி

நிலையங்களில் இடங்களையும், மாநில அரசின் கீழ் வரும் பணிகளில் நியமனங்கள் அல்லது இடங்களை ஒதுக்கீடு செய்தல்) சட்டத்தினை (தமிழ்நாடு சட்டம் 45/1994) அரசு நிறைவேற்றியது. பின்னர், அரசியலமைப்பு சட்டத்தின் பிரிவு 31–பி–இன் கீழ் பாதுகாப்பு பெறும் பொருட்டு தமிழ்நாடு சட்டம் 45/1994 இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் ஒன்பதாவது விவர அட்டவணையில் சேர்க்கப்பட்டது.

மேற்படி சட்டத்தினை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கில் உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்பில், எண்ணிக்கை அடிப்படையிலான விவரங்களை மாநில அரசு தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்திற்குத் தர வேண்டும் எனவும், அதனடிப்படையில் மாநிலத்தில் உள்ள பல்வேறு பிரிவினருக்கும் வழங்கப்பட வேண்டிய இடஒதுக்கீட்டின் அளவினை தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் முடிவு செய்ய வேண்டுமென்றும் தீர்ப்பளித்தது. அதன்படி மாநில அரசால் வழங்கப்பட்ட எண்ணிக்கை அடிப்படையிலான விவரங்களை ஆய்வு செய்த தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையம், வளமான பிரிவினரை நீக்கம் செய்யாமல் 69 விழுக்காடு இடஒதுக்கீடு அளவு சரியென பரிந்துரை அளித்தது. அதன்படி அரசு பணிகளில்

நியமனங்கள் மற்றும் கல்வி நிலையங்களில் மாணவ, மாணவியர் சேர்க்கை ஆகியவற்றில் வளமான பிரிவினரை நீக்கம் செய்யாமல், **69** விழுக்காடு இடஒதுக்கீட்டினை உறுதி செய்து **11.07.2011**–இல் அரசாணை வெளியிடப்பட்டது.

**3. கல்வி**

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினரின் கல்வி அறிவினை உயர்த்துவதிலும், அவர்களது கல்வி தரத்தினை மேம்படுத்துவதிலும், இவ்வரசு பெருமுயற்சி எடுத்து வருகிறது. இப்பிரிவு மாணவர்களுக்காக அனைத்து மாவட்டங்களிலும் விடுதிகளையும், மதுரை, தேனி மற்றும் திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களில் பிரமலை கள்ளர் இன மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளையும் நடத்தி வருகின்றது.

இவ்வரசு மாணவ, மாணவியருக்கு உகந்த தங்கும் வசதிகளை ஏற்படுத்தும் பொருட்டு, அனைத்து விடுதிகளுக்கும் படிப்படியாக சொந்தக் கட்டடம் கட்டும் திட்டத்தினை செயல்படுத்தி வருகிறது. இவை தவிர இப்பிரிவு மாணவ, மாணவியர் நலனுக்காக கல்வி

உதவித்தொகைகள், சீருடைகள் மற்றும் மிதிவண்டிகள் வழங்குதல் போன்ற பல்வேறு திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறது.

## 4. கல்வி உதவித்தொகைத் திட்டங்கள்

ஏழை எளிய பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற் படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ / மாணவியருக்காக இவ்வரசு பள்ளிப்படிப்பு, பள்ளி மேற்படிப்பு மற்றும் இலவசக் கல்வி ஆகிய மூன்று வகையான கல்வி உதவித்தொகைத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. கல்வி உதவித் தொகை பெறுவதற்கான பெற்றோரது ஆண்டு வருமான வரம்பு 2013–2014 ஆம் ஆண்டிலிருந்து, ரூ.1 இலட்சத்திலிருந்து ரூ.2 இலட்சமாக உயர்த்தப் பட்டுள்ளது.

### 4.1 பள்ளிப்படிப்பு கல்வி உதவித்தொகை

அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் தமிழ் மற்றும் ஆங்கிலவழியில் கல்வி பயிலும் மாணவ, மாணவியர் பெறும் கல்வி உதவித்தொகை விவரம்.

| கட்டணம் | தமிழ்வழிக் கல்வி பயிலும் மாணவ, மாணவியர் | ஆங்கிலவழிக் கல்வி பயிலும் மாணவ, மாணவியர் |
|---|---|---|
| சிறப்புக் கட்டணம் | விலக்களிக்கப்–பட்டுள்ளது | விலக்களிக்கப்பட்டுள்ளது |
| கற்பிப்புக் கட்டணம் | விலக்களிக்கப்–பட்டுள்ளது | பி.வ, மி.பி.வ, சீ.ம. மாணவ, மாணவியர் பெறும் உதவித் தொகைகளின் விவரம்.<br>அ) 6 முதல் 8 ஆம் வகுப்பு ஆண்டிற்கு ரூ.200<br>ஆ) 9 மற்றும் 10 ஆம் வகுப்பு ஆண்டிற்கு ரூ.250<br>இ) பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவ / மாணவியர் – நிபந்தனைகள்<br>i. பெற்றோர் ஆண்டு வருமானம் ரூ.2,00,000–க்கு மிகாமல் இருக்க வேண்டும்.<br>ii. குடும்பத்தில் பட்டதாரி எவருமிருக்கக்கூடாது.<br>ஈ) மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல மாணவ, மாணவியருக்கு நிபந்தனைகள் ஏதுமில்லை. |
| தேர்வுக் கட்டணம் | விலக்களிக்கப்பட்டுள்ளது | 10 ஆம் வகுப்பு பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல மாணவ, மாணவியருக்கான தேர்வுக் கட்டணம் அரசுத்தேர்வுகள் இயக்குநருக்கு ஈடு செய்யப்படுகிறது |

இத்திட்டத்தின் கீழ் 2017–2018 ஆம் ஆண்டில், 1,30,340 மாணவ, மாணவியர் பயனடைந்த வகையில் ரூ.301.08 இலட்சம் செலவிடப்பட்டது. அதன் விபரம் பின்வருமாறு.

| மாணவ / மாணவியர் எண்ணிக்கை | | | செலவிடப்பட்ட தொகை (ரூபாய் இலட்சத்தில்) | | |
|---|---|---|---|---|---|
| பிவ | மிபிவ/சீம | மொத்தம் | பிவ | மிபிவ/ சீம | மொத்தம் |
| 66,299 | 64,041 | 1,30,340 | 167.04 | 134.04 | 301.08 |

2018–2019 ஆம் ஆண்டிற்கு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறைக்கு ரூ.167.05 இலட்சமும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறைக்கு ரூ.178.08 இலட்சமும் ஆக மொத்தம் ரூ.345.13 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**4.2 பள்ளி மாணவ, மாணவியருக்கான பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித் தொகை**

அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் தமிழ் மற்றும் ஆங்கிலவழியில் பயிலும் 11 மற்றும் 12–ஆம் வகுப்பு மாணவ, மாணவியர் பெறும் கல்வி உதவித்தொகைகளின் விவரம்.

| கட்டணம் | தமிழ்வழிக் கல்வி பயிலும் மாணவ, மாணவியர் | ஆங்கிலவழிக் கல்வி பயிலும் மாணவ, மாணவியர் |
|---|---|---|
| சிறப்புக் கட்டணம் | விலக்களிக்கப்–பட்டுள்ளது | விலக்களிக்கப்பட்டுள்ளது |
| கற்பிப்புக் கட்டணம் | விலக்களிக்கப்–பட்டுள்ளது | பி.வ, மி.பி.வ, சீ.ம. மாணவ, மாணவியர் பெறும் உதவித் தொகைகளின் விவரம்.<br>அ) ஆண்டிற்கு ரூ.500<br>ஆ) பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவ/ மாணவியர் – நிபந்தனைகள்<br>i. பெற்றோர் ஆண்டு வருமானம் ரூ.2,00,000–க்கு மிகாமல் இருக்க வேண்டும்.<br>ii. குடும்பத்தில் பட்டதாரி எவருமிருக்கக்கூடாது .<br>இ) மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல மாணவ, மாணவியருக்கு நிபந்தனைகள் ஏதுமில்லை. |
| தேர்வுக் கட்டணம் | விலக்களிக்கப்–பட்டுள்ளது | 12–ஆம் வகுப்பு பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற் படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல மாணவ, மாணவியருக்கான தேர்வுக் கட்டணம் அரசுத்தேர்வுகள் இயக்குநருக்கு ஈடு செய்யப்படுகிறது. |

**4.3 கல்லூரி மாணவ, மாணவியருக்கான பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித்தொகை**

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சார்ந்த பட்டயப் படிப்பு, ஐ.டி.ஐ, பட்டமேற்படிப்பு, தொழிற்கல்வி மற்றும் ஆராய்ச்சிப் படிப்பு பயிலும் மாணவ, மாணவியரின் பெற்றோரது ஆண்டு வருமானம் ரூ.2,00,000–க்கு மிகாமல் இருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு, சிறப்புக் கட்டணம் மற்றும் கற்பிப்புக் கட்டணம் அரசு கல்வி நிலையங்களில் நிர்ணயிக்கப்பட்ட அளவிலும் தேர்வுக் கட்டணம் முழுமையாகவும், புத்தகக் கட்டணம் கல்வி உதவித் தொகை அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறும் வழங்கப்பட்டு வருகின்றது. அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகளில் இரண்டாவது முறைமாற்றம் (Second Shift) வகுப்புகளில் பயிலும் மாணவ, மாணவியருக்கும் கல்வி உதவித்தொகை வழங்கப்படுகிறது. மேலும், கல்வி நிலையங்களே நடத்தும் விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியருக்கு மேற்படி கல்வி உதவித் தொகையுடன் உண்டி, உறையுள் கட்டணம் வழங்கப்படுகிறது. தொழிற்கல்வி பயிலும் மாணவ,

மாணவியருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.350 என்ற விகிதத்திலும், ஐ.டி.ஐ / பட்டயப்படிப்பு மற்றும் முதுகலை மாணவ, மாணவியருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.225 என்ற விகிதத்திலும் ஆண்டிற்கு 10 மாதங்களுக்கு இக்கட்டணம் வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ் 2017–2018 ஆம் ஆண்டில் **2,28,661** மாணவ, மாணவியர் பயனடையும் வகையில் ரூ.**8,317.93** இலட்சம் செலவிடப்பட்டது. அதன் விவரம் பின்வருமாறு.

| **மாணவ / மாணவியர் எண்ணிக்கை** | | | **செலவிடப்பட்ட தொகை (ரூபாய் இலட்சத்தில்)** | | |
|---|---|---|---|---|---|
| **பிவ** | **மிபிவ / சீம** | **மொத்தம்** | **பிவ** | **மிபிவ/ சீம** | **மொத்தம்** |
| 1,55,831 | 72,830 | 2,28,661 | 5,333.07 | 2,984.86 | 8,317.93 |

**2018–2019** ஆம் ஆண்டிற்கு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறைக்கு ரூ.**5,725** இலட்சமும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறைக்கு ரூ.**3,334.43** இலட்சமும் ஆக மொத்தம் ரூ.**9,059.43** இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 5. இலவசக் கல்வி

### 5.1 பட்டப்படிப்பு

அரசு மற்றும் அரசு உதவி பெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் மூன்று ஆண்டு இளங்கலைப் பட்டப்படிப்பு பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சார்ந்த மாணவ, மாணவியருக்கு சிறப்புக் கட்டணம் மற்றும் திரும்ப வழங்கப்படாத கட்டாயக் கட்டணங்கள் ஆகியவை அரசு நிர்ணயித்த அளவிலும், புத்தகக் கட்டணம் கல்வி உதவித் தொகை அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறும் மற்றும் தேர்வுக் கட்டணம் முழுமையாகவும் எவ்வித நிபந்தனையுமின்றி வழங்கப்படுகிறது. இக்கல்வி உதவித்தொகையுடன், கல்வி நிறுவனங்களுடன் இணைந்துள்ள விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ / மாணவியருக்கு மாதம் ரூ.175 வீதம் ஆண்டிற்கு 10 மாதங்களுக்கு உண்டி உறையுள் கட்டணம் வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் **2017–2018** ஆம் ஆண்டில் **1,82,165** மாணவ, மாணவியர் பயனடையும் வகையில் ரூ.**3,069.02** இலட்சம் செலவிடப்பட்டது. அதன் விபரம் பின்வருமாறு.

| மாணவ / மாணவியர் எண்ணிக்கை | | | செலவிடப்பட்ட தொகை (ரூபாய் இலட்சத்தில்) | | |
|---|---|---|---|---|---|
| பிவ | மிபிவ/சீம | மொத்தம் | பிவ | மிபிவ/சீம | மொத்தம் |
| 1,01,572 | 80,593 | 1,82,165 | 1,747.00 | 1,322.02 | 3,069.02 |

**2018–2019** ஆம் ஆண்டிற்கு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறைக்கு ரூ.**2,050** இலட்சமும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறைக்கு ரூ.**1,358.04** இலட்சமும் ஆக மொத்தம் ரூ.**3,408.04** இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 5.2 இலவசக் கல்வி – பட்டயப்படிப்பு

இத்திட்டத்தின் கீழ் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் (Polytechnics) பட்டயப் படிப்பு பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சார்ந்த மாணவ, மாணவியருக்கு அவர்களது பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.**2,00,000**–க்கு மிகாமல் இருக்க

வேண்டும் மற்றும் குடும்பத்தில் முதல் பட்டய / பட்டதாரியாக இருக்க வேண்டும் என்ற நிபந்தனைகளுக்குட்பட்டு, கற்பிப்புக் கட்டணம், சிறப்புக் கட்டணம் மற்றும் திரும்ப வழங்கப்படாத கட்டாயக் கட்டணங்கள் அரசு நிர்ணயித்த அளவிலும் புத்தகக் கட்டணம் கல்வி உதவித் தொகை அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறும் மற்றும் தேர்வுக் கட்டணம் முழுமையாகவும் வழங்கப்படுகிறது. மேலும், கல்வி நிலையங்களே நடத்தும் விடுதிகளில் தங்கிப்பயிலும் மாணவ, மாணவியருக்கு மேற்படி கல்வி உதவித் தொகையுடன் உண்டி, உறையுள் கட்டணம் மாதம் ஒன்றுக்கு ரூ.225 வீதம் ஆண்டிற்கு 10 மாதங்களுக்கு வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் 2017–2018 ஆம் ஆண்டில் 5,314 மாணவ, மாணவியருக்கு ரூ.200.62 இலட்சம் செலவிடப்பட்டது. அதன் விபரம் பின்வருமாறு.

| மாணவ / மாணவியர் எண்ணிக்கை | | | செலவிடப்பட்ட தொகை (ரூபாய் இலட்சத்தில்) | | |
|---|---|---|---|---|---|
| பிவ | மிபிவ / சீம | மொத்தம் | பிவ | மிபிவ / சீம | மொத்தம் |
| 3,225 | 2,089 | 5,314 | 123.26 | 77.36 | 200.62 |

**2018–2019** ஆம் ஆண்டிற்கு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைக்கு ரூ.**260** இலட்சமும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறைக்கு ரூ.**275.82** இலட்சமும் ஆக மொத்தம் ரூ.**535.82** இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 5.3 இலவசக் கல்வி – தொழிற்படிப்பு

இத்திட்டத்தின் கீழ் அரசு, அரசு உதவிபெறும் கல்லூரிகள் மற்றும் சுயநிதிக் கல்லூரிகளில் அரசு ஒதுக்கீட்டின் கீழ் ஒற்றைச் சாளர முறையில் தேர்வு செய்யப்பட்டு தொழிற்படிப்பு பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சார்ந்த மாணவ, மாணவியருக்கு அவர்களது பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.**2,00,000**–க்கு மிகாமல் இருக்க வேண்டும் மற்றும் அவர்களது குடும்பத்தில் முதல் பட்டதாரியாக இருக்க வேண்டும் என்ற நிபந்தனைகளுக்குட்பட்டு சிறப்புக் கட்டணம் மற்றும் திரும்பப் பெற இயலாத கட்டாயக் கட்டணங்கள் அரசு நிர்ணயித்த அளவிலும் புத்தகக் கட்டணம் கல்வி உதவித் தொகை அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறும் மற்றும் தேர்வுக் கட்டணம் முழுமையாகவும் வழங்கப்படுகிறது.

மேலும், கல்வி நிலையங்களே நடத்தும் விடுதிகளில் தங்கிப்பயிலும் மாணவ, மாணவியருக்கு மேற்படி கல்வி உதவித் தொகையுடன் உண்டி, உறையுள் கட்டணம் மாதம் ஒன்றுக்கு ரூ.350 வீதம் ஆண்டிற்கு 10 மாதங்களுக்கு வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் 2017–2018 ஆம் ஆண்டில் 1,65,088 மாணவ, மாணவியருக்கு ரூ.8,343.94 இலட்சம் செலவிடப்பட்டது. அதன் விபரம் பின்வருமாறு.

| மாணவ/மாணவியர் எண்ணிக்கை | | | செலவிடப்பட்ட தொகை (ரூபாய் இலட்சத்தில்) | | |
|---|---|---|---|---|---|
| பிவ | மிபிவ/ சீம | மொத்தம் | பிவ | மிபிவ/ சீம | மொத்தம் |
| 1,02,343 | 62,745 | 1,65,088 | 5,177.17 | 3,166.77 | 8,343.94 |

2018–2019 ஆம் ஆண்டிற்கு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறைக்கு ரூ.5,895 இலட்சமும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறைக்கு ரூ.3,555.22 இலட்சமும் ஆக மொத்தம் ரூ.9,450.22 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 5.4 இணையதளம் மூலம் கல்வி உதவித்தொகை ஒப்பளிப்பு செய்தல்

கல்லூரிகளில் பயிலும், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சார்ந்த மாணவ, மாணவியருக்கு கல்வி உதவித்தொகை வழங்கும் திட்டம், தேசிய தகவல் மையத்தால் உருவாக்கப்பட்ட www.escholarship.tn.gov.in என்ற இணையதளம் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2013–2014 ஆம் ஆண்டு முதல் இம்மாணவ, மாணவியரின் கல்வி உதவித் தொகை அவர்களின் வங்கி கணக்கில் நேரடியாக மின்னணு பரிமாற்றம் (ECS) மூலம் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்களால் வரவு வைக்கப்பட்டு வந்தது. 2016–2017 ஆம் ஆண்டு முதல் இந்நடைமுறை மேலும் மேம்படுத்தப்பட்டு விரைவில் பணப்பட்டுவாடா செய்யும் வகையில் அந்தந்த துறைத் தலைமை அலுவலகத்தாலேயே, மாணவ / மாணவியருக்கு நேரடியாக மின்னணு பரிமாற்றம் மூலம் கல்வி உதவித்தொகை விடுவிக்கப்படுகிறது.

## 6. மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சார்ந்த கிராமப்புற பள்ளி மாணவியருக்கு ஊக்கத்தொகை வழங்குதல்

கிராமப்புறத்தில் உள்ள மாணவியர் கல்வியை இடையில் நிறுத்தாமல் தொடர்ந்து கல்வி பயில்வதை ஊக்குவிக்கும் பொருட்டு 3 ஆம் வகுப்பு முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சார்ந்த மாணவியருக்கு, ஆண்டிற்கு தலா ரூ.500 என்ற அளவிலும், 6 ஆம் வகுப்பு பயிலும் மாணவியருக்கு ஆண்டிற்கு ரூ.1,000 என்ற அளவிலும் ஊக்கத்தொகை வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் 2017–2018 ஆண்டு முதல் பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.25,000–லிருந்து ரூ.72,000 ஆக உயர்த்தப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ் 2017–2018 ஆம் ஆண்டில் 2,49,784 மாணவியர் பயனடைந்த வகையில் ரூ.1,528.25 இலட்சம் செலவிடப்பட்டது.

**2018–2019** ஆம் ஆண்டிற்கு ரூ.1,434.50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 7. விடுதிகள்

நலிவடைந்த பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற் படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையின மாணவ, மாணவியர் இடையூறின்றி கல்வி பயில ஏதுவாக மாநிலம் முழுவதும் 1,343 அரசு விடுதிகள் செயல்படுகின்றன. இவற்றில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையின் கீழ் 735 விடுதிகளும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறையின் கீழ் 592 விடுதிகளும் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் கீழ் 16 விடுதிகளும் இயங்கி வருகின்றன. இவ்விடுதிகளில் ஆண்டுதோறும் 84,814 மாணவ/ மாணவியர் பயனடைந்து வருகின்றனர். பெற்றோர் ஆண்டு வருமானம் ரூ.1,00,000–க்கு மிகாமல் உள்ள மாணவ, மாணவியர் விடுதிகளில் சேர தகுதி பெற்றவர்களாவர். விடுதி மாணவ, மாணவியருக்கான உண்டி உறையுள் விடுதி செலவினம் முழுவதையும் அரசே ஏற்கிறது. மாணவ, மாணவியரிடமிருந்து எவ்வித தொகையும் வசூலிக்கப்படுவதில்லை.

இவ்விடுதிகளில் ஒப்பளிக்கப்பட்ட மாணவ, மாணவியரின் எண்ணிக்கைக்குக் கூடுதலாக 10 விழுக்காடு இடங்களில் மாணவ, மாணவியரைச் சேர்க்க, 2011–2012 ஆம் ஆண்டு முதல் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சியரின் அதிகாரத்திற்குட்பட்ட கூடுதல் இடங்கள் அனுமதிக்கப்பட்ட பின்னரும், தேவை அதிகரிப்பின் விடுதிகளில் ஒப்பளிக்கப்பட்ட எண்ணிக்கைக்குக் கூடுதலாக, மொத்தம் 2,185 மாணவ, மாணவியரைச் சேர்த்திட, துறை தலைவர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இது தவிர, முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களின் குழந்தைகளுக்கு ஒவ்வொரு விடுதியிலும் 5 இடங்கள் கூடுதலாக ஒதுக்கப்பட்டுள்ளன.

2012–2013 ஆம் ஆண்டு முதல், தமிழ்நாட்டை பிறப்பிடமாக கொண்டு கேரள எல்லையோரப் பகுதியில் உள்ள மலைத் தோட்டங்களில் பணிபுரியும் தோட்டத் தொழிலாளர்களின் குழந்தைகளை தேனி மாவட்டத்தில் உள்ள விடுதிகளில் சேர்ப்பதற்கு ஏதுவாக, சாதி மற்றும் வருமானச் சான்றிதழ் அளிப்பதிலிருந்து அவர்களுக்கு விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. அதற்குப் பதிலாக,

அவர்களின் பெற்றோர் அளிக்கும் சுய அறிவிப்பு ஏற்கப்படுகிறது .

**7.1 புதிய விடுதிகள் திறப்பு**

தேவையின் அடிப்படையில் மாணவர்களின் பயன்பாட்டிற்காக புதிய விடுதிகள் துவங்கப்பட்டு வருகின்றன. **2017–2018** ஆம் ஆண்டில் ஒவ்வொரு விடுதியிலும் **100** மாணவ/மாணவியர் தங்கும் வகையில் புதிதாக **5** கல்லூரி விடுதிகள் துவக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் மொத்தம் **500** மாணவ / மாணவியர் **2017–2018** ஆம் ஆண்டு முதல் கூடுதலாக பயன்பெறுகின்றனர்.

**7.2 உணவுக் கட்டணம்**

பள்ளி விடுதி மாணவ, மாணவியருக்கான உணவுக் கட்டணம் மாதம் ரூ.**755**–லிருந்து ரூ.**900** ஆகவும், கல்லூரி விடுதி மாணவ, மாணவியருக்கான மாதாந்திர உணவுக் கட்டணம் ரூ.**875**–லிருந்து ரூ.**1,000** ஆகவும், **1.6.2017** முதல் உயர்த்தப்பட்டுள்ளது. இதுதவிர, சோப் மற்றும் எண்ணெய் போன்றவற்றிற்காக மாதாந்திர பல்வகை செலவினம் பள்ளி விடுதி மாணவ/மாணவியருக்கு ரூ.**50** ஆகவும், கல்லூரி விடுதி மாணவ/மாணவியருக்கு ரூ.**75** ஆகவும்

வழங்கப்பட்டு வருகிறது. பண்டிகை நாட்களில் சிறப்பு உணவு வழங்குவதற்கு பள்ளி விடுதி மாணவ/ மாணவியருக்கு ரூ.20–ம், கல்லூரி விடுதி மாணவ/மாணவியருக்கு ரூ.40–ம் வழங்கப்படுகிறது.

**2017–2018** ஆம் ஆண்டில் விடுதிகளின் உணவுக் கட்டணம், நிர்வாகம், பராமரிப்பு மற்றும் பிற செலவினங்களுக்காக ரூ.**23,605.49** இலட்சம் செலவிடப்பட்டது.

**2018–2019** ஆம் ஆண்டிற்கு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறைக்கு ரூ.**14,936.42** இலட்சமும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறைக்கு ரூ.**11,743.72** இலட்சமும் ஆகமொத்தம் ரூ.**26,680.14** இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**7.3 விடுதி மாணவ, மாணவியர் பெறும் இதர பயன்கள்**

1. ஒவ்வொரு விடுதிக்கும் ஒரு ஆங்கிலம் மற்றும் இரண்டு தமிழ் நாளிதழ்கள் வழங்கப்படுகின்றன.
2. விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியருக்குப் பன்னிரெண்டாம் வகுப்பு வரை

அனைத்து பாடப்புத்தகங்களும் விலையில்லாமல் பள்ளிக் கல்வித் துறையால் வழங்கப்படுகின்றன.

3. விடுதிகளில் தங்கிப்பயிலும் 10 மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவ, மாணவியர் பொதுத் தேர்வில் சிறந்த மதிப்பெண்கள் பெற்றிட, அவர்களுக்கு விலையில்லா சிறப்பு வழிகாட்டி நூல்கள் வழங்கப்படுகின்றன.

4. 4 முதல் 10 ஆம் வகுப்பு வரை விடுதியில் தங்கிப்பயிலும் மாணவ, மாணவியருக்கு, மதிய உணவு திட்ட பயனாளிகளுக்கு வழங்கப்படுவதைப் போன்ற வண்ணம் மற்றும் வடிவமைப்பில் நான்கு இணை சீருடைகள் வழங்கப்படுகின்றன.

5. பள்ளி மற்றும் கல்லூரி விடுதிகளில் வண்ணத் தொலைக்காட்சிப்பெட்டி, விளையாட்டு பொருட்கள், நீர் சுத்திகரிப்புக்கருவி, புத்தக அலமாரிகள், மாவரைக்கும் இயந்திரம், மின்அரைப்பான், சுகாதார குட்டைத் தகளி, தீயணைப்பான் கருவிகள், இட்லி

வேகவைப்பான்கள், நூலகப் புத்தகங்கள் மற்றும் பூச்சி அழிப்பான் மின் கருவி ஆகியன வழங்கப்படுகின்றன. இவற்றுடன் கல்லூரி விடுதிகளுக்கு இன்வர்ட்டர் கருவி, பார்வை குறிப்புப் புத்தகங்கள், உடனடி மாவரைக்கும் இயந்திரம், நீராவி கொதிக்கலன் மற்றும் இரண்டடுக்கு கட்டில்கள் வழங்கப்படுகின்றன.

6. விடுதி மாணவ, மாணவியருக்கு பாய்கள், ஜமக்காளங்கள், போர்வைகள், எவர்சில்வர் தட்டுகள் மற்றும் டம்ளர்கள் வழங்கப்படுகின்றன. மலைப் பிரதேசங்களில் உள்ள விடுதி மாணவ, மாணவியருக்கு கம்பளி ஆடை வழங்கப்படுகிறது.

7. அனைத்து விடுதிகள் மற்றும் கள்ளர் சீரமைப்புப் பள்ளி மாணவ, மாணவியருக்கு ஆண்டு தோறும் மூன்று மருத்துவப் பரிசோதனைகள் நடத்தப்படுகின்றன.

8. ஒருவருக்கு ஒரு நாளைக்கு ஒன்று என்ற வீதத்தில் விடுதி மாணவ, மாணவியருக்கு

வாரத்திற்கு ஐந்து நாட்கள் வேகவைத்த முட்டைகள் வழங்கப்படுகின்றன. முட்டை சாப்பிடாதவர்களுக்கு வாழைப்பழங்கள் வழங்கப்படுகின்றன.

9. ஒவ்வொரு மாதத்தின் முதல் மற்றும் மூன்றாம் புதன் கிழமைகளில் ஆட்டிறைச்சியும், இரண்டாம் மற்றும் நான்காம் புதன் கிழமைகளில் கோழி இறைச்சியும் வழங்கப்படுகின்றன.

10. மாலை நேர சிற்றுண்டியாக தினந்தோறும் சுண்டல் மற்றும் சுக்குமல்லி காபி / தேநீர் வழங்கப்படுகின்றன.

11. 2017–2018 ஆம் ஆண்டில் 10 மற்றும் 12 ஆம் வகுப்பு மற்றும் கல்லூரி விடுதி மாணவ, மாணவியருக்கு வேலைவாய்ப்புகள் பெறுவதற்காக நடத்தப்படும் பல்வேறு போட்டித் தேர்வுகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த வாழ்க்கை வழிகாட்டி நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

12. விடுதி மாணவ, மாணவியருக்கு ரூ.49.84 இலட்சம் செலவில் விளையாட்டுப் பொருட்கள் 2017–2018 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டன.

13. 2017–2018 ஆம் ஆண்டில் விடுதிகளில் பணிபுரியும் பகுதி நேர துப்புரவு பணியாளர்களின் மாதாந்திர தொகுப்பூதியம் ரூ.2,000–லிருந்து ரூ.3,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. மேலும், விடுதிகளில் 28 துப்புரவு பணியாளர் பணியிடங்கள் புதிதாக தோற்றுவிக்கப்பட்டுள்ளன.

## 8. அரசால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் விடுதிகளுக்கு உணவு மானியம்

பெற்றோர் ஆண்டு வருமானம் ரூ.50,000–க்கு மிகாமலிருக்கும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சார்ந்த மாணவ, மாணவியர் அரசால் அங்கீகரிக்கப்பட்ட 39 தனியார் விடுதிகளில் தங்கி பயில, மாதம் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு ரூ.650 வீதம் ஆண்டிற்கு 10 மாதங்களுக்கு உணவு மானியத்தொகை அரசால் வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் **2017–2018** ஆம் ஆண்டில் **1,069** மாணவ, மாணவியருக்கு ரூ.**69.46** இலட்சம் செலவிடப்பட்டது. அதன் விபரம் பின்வருமாறு.

| **மாணவ / மாணவியர் எண்ணிக்கை** | | | **செலவிடப்பட்ட தொகை (ரூபாய் இலட்சத்தில்)** | | |
|---|---|---|---|---|---|
| **பிவ** | **மிபிவ/ சீம** | **மொத்தம்** | **பிவ** | **மிபிவ/ சீம** | **மொத்தம்** |
| **567** | **502** | **1,069** | **36.85** | **32.61** | **69.46** |

**2018–2019** ஆம் ஆண்டிற்கு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைக்கு ரூ.**50** இலட்சமும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத் துறைக்கு ரூ.**50** இலட்சமும் ஆக மொத்தம் ரூ.**100** இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 9. சிறந்த காப்பாளர்கள் / காப்பாளினிகளுக்கு மாநில அளவிலான விருதுகள் வழங்குதல்

விடுதிகளை நன்முறையில் பராமரித்தும் மற்றும் மாணவ, மாணவியரின் முழுமையான வளர்ச்சிக்காக செயல்படும் காப்பாளர்கள் / காப்பாளினிகளை ஊக்குவிக்கும் பொருட்டு, மாநில அளவில் சிறந்த காப்பாளர்கள் / காப்பாளினிகள் தேர்வு செய்யப்பட்டு பரிசு வழங்கப்படுகிறது. இதற்காக

முறையே ரூ.5,000, ரூ.3,000 மற்றும் ரூ.2,000 என்ற வீதத்தில் முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் பரிசுகள் வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின் கீழ் 2017–2018 ஆம் ஆண்டில் ரூ.0.10 இலட்சம் செலவிடப்பட்டது.

இத்திட்டத்திற்கு 2018–2019 ஆம் ஆண்டில் ரூ.0.10 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 10. விடுதிகளுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டுதல்

இத்துறையின் கட்டுப்பாட்டில் இயங்கி வரும் 1,343 அரசு விடுதிகளில் 1,265 விடுதிகள் சொந்தக் கட்டடங்களில் செயல்படுகின்றன. வாடகைக் கட்டடங்களில் இயங்கும் 78 விடுதிகளில், 37 விடுதிகளுக்கு சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு, கட்டுமானப் பணி நடைபெற்று வருகிறது. எஞ்சிய 41 விடுதிகளுக்கு சொந்த கட்டடங்கள் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கடந்த ஓராண்டில் 73 விடுதிகளுக்கான கட்டடங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

**2017–2018** ஆம் ஆண்டில் கட்டுமானப் பணிகளுக்காக ரூ.**1,806.61** இலட்சம் செலவிடப்பட்டது.

**2018–2019** ஆம் ஆண்டிற்கு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறைக்கு ரூ.**842.80** இலட்சமும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறைக்கு ரூ.**836.98** இலட்சமும், சிறுபான்மையினர் நலத்துறைக்கு ரூ.**267** இலட்சமும் ஆக மொத்தம் ரூ.**1,946.78** இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 10.1 விடுதி கட்டடங்கள் பராமரிப்பு

சொந்தக் கட்டடங்களில் இயங்கி வரும் விடுதிகளின் பராமரிப்பு பணிகள் பொதுப்பணித்துறை மூலம் மேற்கொள்ளப்படுகின்றன. இப்பணிகளுக்காக ஆண்டு தோறும் ரூ.**600** இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. **2017–2018** ஆம் ஆண்டில் **150** விடுதிகளின் பராமரிப்பு பணிகளுக்காக ரூ.**600** இலட்சம் செலவிடப்பட்டது.

**2018–2019** ஆம் ஆண்டில் விடுதிகளின் பராமரிப்பு பணிகளுக்காக ரூ.**600** இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 11. கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள்

பிரமலைக் கள்ளர் வகுப்பினரின் கல்வி நிலையினை மேம்படுத்தும் பொருட்டு, அவ்வகுப்பினர் பெருமளவில் வசிக்கும் மதுரை, தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறை கட்டுப்பாட்டின் கீழ் 292 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள் செயல்படுகின்றன. இதில் 214 தொடக்கப் பள்ளிகள், 21 நடுநிலைப் பள்ளிகள், 22 உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் 35 மேல்நிலைப் பள்ளிகள் அடங்கும். இந்த 292 பள்ளிகளில் மொத்தம் 26,039 மாணவ, மாணவியர் பயின்று வருகின்றனர்.

இம்மாணவ, மாணவியருக்கு அரசு / அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியருக்கு வழங்கப்படுவதைப் போன்று, சிறப்பு ஊக்கத் தொகை, காலணி, மடிக்கணினி, புத்தகப்பை, கணித உபகரணப்பெட்டி, வண்ணப் பென்சில்கள் மற்றும் உலக வரைபடப் புத்தகம் ஆகியன பள்ளிக் கல்வித் துறையால் வழங்கப்படுகின்றன. 2017–2018 ஆம் கல்வியாண்டில் கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் 10 மற்றும் 12 ஆம்

வகுப்புகளில் தேர்ச்சி விகிதம் முறையே **96.9** விழுக்காடு மற்றும் **92** விழுக்காடு ஆகும்.

**2011–2012** ஆம் ஆண்டில் மதுரை, தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் தலா **5** பள்ளிகள் வீதம் மொத்தம் **15** ஆரம்பப் பள்ளிகளில், ஆங்கில வழி மழலையர் வகுப்புகள் **(LKG)** தொடங்கப்பட்டன. இப்பள்ளிகளில் தற்போது ஐந்தாம் வகுப்பு வரை ஆங்கில வழி வகுப்புகள் நடைபெற்று வருகின்றன. இவ்வகுப்புகளில் **1,042** மாணவ, மாணவியர் பயின்று வருகின்றனர்.

**2017–2018** ஆம் ஆண்டில் நபார்டு வங்கி உதவியுடன் கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த ரூ.**13.07** கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

**2017–2018** ஆம் ஆண்டில் கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளின் செயல்பாட்டிற்காக ரூ.**9,136.24** இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

**2018–2019** ஆம் ஆண்டிற்கு ரூ.**11,064.59** இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 11.1 கள்ளர் சீரமைப்புப் பள்ளிக் கட்டடங்கள் பராமரிப்பு

கள்ளர் சீரமைப்புப் பள்ளிக் கட்டடங்களின் பராமரிப்பு மற்றும் பழுதுபார்க்கும் பணிகளுக்காக ஆண்டுதோறும் ரூ.1 கோடி அரசு ஒதுக்கீடு செய்து வருகிறது. 2017–2018 ஆம் ஆண்டில் 22 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

2018–2019 ஆம் ஆண்டிற்கும் கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளின் கட்டிட பராமரிப்புக்காக ரூ.1 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 11.2 அரசு கள்ளர் சீரமைப்பு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளித்தலைமை ஆசிரியர்கள் / ஆசிரியர்களுக்கு பரிசுகள் வழங்கும் திட்டம்

அரசு கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் உள்ள உயர்நிலை / மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு பரிசுகள் வழங்கும் திட்டம் 2011–2012 ஆம் கல்வியாண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் அரசு கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியரில் 10 மற்றும் 12 ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வுகளில் 95 விழுக்காடு மற்றும் அதற்கு அதிகமாக தேர்ச்சி பெற செய்யும் உயர்நிலை / மேல்நிலைப்பள்ளித்

தலைமையாசிரியர்களுக்கு தலா ரூ.10,000 பரிசுத்தொகை மற்றும் நற்சான்றிதழ் வழங்கப்பட்டு வருகிறது.

அதேபோல் கள்ளர் சீரமைப்பு உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் 10 மற்றும் 12 ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வுகளில் தத்தமது பாடப்பிரிவில் 100 விழுக்காடு மாணவ, மாணவியரை தேர்ச்சி பெறச் செய்யும் முதுகலைப் பட்டதாரி மற்றும் இளங்கலை பட்டதாரி ஆசிரியர்களுக்கு தலா ரூ.5,000 பரிசுத் தொகை வழங்கும் திட்டம் 2014–2015 ஆம் கல்வியாண்டு முதல் செயல்படுத்தப்படுகிறது.

2017–2018 ஆம் ஆண்டில் தலைமையாசிரியர்கள் / ஆசிரியர்களுக்கு ரூ.27.65 இலட்சம் பரிசு தொகைகளுக்காக செலவிடப்பட்டது.

2018–2019 ஆம் ஆண்டிற்கு இத்திட்டங்களுக்காக ரூ.18 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 12. சீருடைகள்

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையின விடுதிகளில் தங்கி 10 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியருக்கு 4

விலையில்லா இணை சீருடைகள் ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்படுகின்றன. அதேபோல கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் எட்டாம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியருக்கு 4 விலையில்லா இணை சீருடைகள் சமூகநலத் துறையால் ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்படுகின்றன. இச்சீருடைகள் வண்ணம் மற்றும் வடிவமைப்பில் பள்ளிகளில் பின்பற்றப்படுவது போலவே வழங்கப்படுகின்றன. சீருடைக்கான துணிகள் கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்திடமிருந்து கொள்முதல் செய்யப்பட்டு, சமூகநலத் துறையின் கீழ் செயல்படும் மாவட்ட மகளிர் தையல் தொழில் கூட்டுறவு சங்கங்கள் மூலம் தைத்து வழங்கப்படுகின்றன.

**2017–2018** ஆம் ஆண்டில் மொத்தம் **43,065** மாணவ, மாணவியருக்கு ரூ.**343.51** இலட்சம் செலவில் சீருடைகள் வழங்கப்பட்டன. அதன் விபரம் வருமாறு.

| மாணவ / மாணவியர் எண்ணிக்கை | | | செலவிடப்பட்ட தொகை (ரூபாய் இலட்சத்தில்) | | |
|---|---|---|---|---|---|
| பிவ | மிபிவ / சீம | மொத்தம் | பிவ | மிபிவ / சீம | மொத்தம் |
| 22,354 | 20,711 | 43,065 | 234.05 | 109.46 | 343.51 |

**2018–2019** ஆம் ஆண்டிற்கு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைக்கு ரூ.**200** இலட்சமும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத் துறைக்கு ரூ.**224.73** இலட்சமும் ஆக மொத்தம் ரூ.**424.73** இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**13. மிதிவண்டிகள் வழங்கும் திட்டம்**

அரசு, அரசு நிதியுதவி மற்றும் பகுதி நிதியுதவி பெறும் பள்ளிகளில் **11** ஆம் வகுப்பு பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் மாணவ, மாணவியருக்கு எவ்வித நிபந்தனையுமின்றி விலையில்லா மிதிவண்டிகள் வழங்கப்படுகின்றன. பள்ளி வளாகத்தில் அமைந்துள்ள விடுதி மற்றும் உண்டி உறைவிடப்பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியருக்கு மிதிவண்டிகள் வழங்கப்படுவதில்லை. மிதிவண்டிகள் வழங்குவது www.agaram.tn.gov.in/freecycles இணையதளம் மூலம் கண்காணிக்கப்படுகிறது.

**2017–2018** ஆம் கல்வியாண்டில் **11** ஆம் வகுப்பு பயின்ற மாணவ, மாணவியருக்கும், **2018–2019** ஆம் ஆண்டில்

11 ஆம் வகுப்பு பயின்று வரும் மாணவ, மாணவியருக்கும் நடப்பாண்டில் மிதிவண்டிகள் வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. 2017–2018 மற்றும் 2018–2019 ஆகிய இரண்டு ஆண்டுகளுக்கும் சேர்த்து மொத்தம் 12 இலட்சம் மிதிவண்டிகள் கொள்முதல் செய்து வழங்கப்படும்.

2018–2019 ஆம் ஆண்டிற்கு, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறைக்கு ரூ.11,652.87 இலட்சமும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறைக்கு ரூ.11,345.54 இலட்சமும் ஆக மொத்தம் ரூ.22,998.41 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 14. பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள்

### 14.1 தையல் இயந்திரங்கள் மற்றும் சலவைப் பெட்டிகள் வழங்குதல்

பொருளாதார நிலையில் பின்தங்கியுள்ள பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மக்களின் வாழ்வாதார வளர்ச்சிக்காக விலையில்லா தையல் இயந்திரங்கள் மற்றும் சலவைப் பெட்டிகள் வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின் கீழ்

பயன்பெற பயனாளிகளின் குடும்ப ஆண்டு வருமானம் கிராமப்புறங்களில் ரூ.40,000—க்கு மிகாமலும், நகர்ப்புறங்களில் ரூ.60,000—க்கு மிகாமலும் இருக்க வேண்டும் என இருந்தது. 2017—2018 ஆம் ஆண்டு முதல் இவ்வருமான வரம்பு கிராமப்புற மற்றும் நகர்ப்புற பயனாளிகளுக்கு ரூ.72,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. 2017—2018 ஆம் ஆண்டில் ரூ.104.97 இலட்சம் செலவில் 2,092 சலவைப் பெட்டிகள் வழங்கப்பட்டன.

2018—2019 ஆம் ஆண்டிற்கு தையல் இயந்திரங்கள் வழங்கும் திட்டத்திற்காக ரூ.92.80 இலட்சமும், சலவைப் பெட்டிகள் வழங்கும் திட்டத்திற்காக ரூ.85 இலட்சமும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 14.2. வீட்டு மனை வழங்குதல்

இத்திட்டத்தின் கீழ் வீட்டு மனையற்ற பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பினருக்கு ஆண்டு வருமானம் கிராமப்புறங்களைப் பொறுத்த வரை ரூ.40,000—க்கு மிகாமலும், நகர்ப்புறங்களைப் பொறுத்தவரை ரூ.60,000—க்கு மிகாமலும் இருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு

வீட்டு மனைகள் விலையேதுமின்றி வழங்கப்பட்டு வந்தது. 2017–2018 ஆம் ஆண்டு முதல் இவ்வருமான வரம்பு கிராமப்புற மற்றும் நகர்ப்புற பயனாளிகளுக்கு ரூ.72,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

2017–2018 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் 278 பயனாளிகளுக்கு வீட்டுமனைகள் வழங்கப்பட்டன.

2018–2019 ஆம் ஆண்டிற்கு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைக்கு ரூ.200 இலட்சமும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத் துறைக்கு ரூ.150 இலட்சமும் ஆக மொத்தம் ரூ.350 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 15. நல வாரியங்கள்

சீர்மரபினர் மற்றும் நரிக்குறவர் இனத்தவர்களின் சமூக, கல்வி மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்கான உதவிகளை வழங்கிட, அரசு நல வாரியங்களை அமைத்துள்ளது. அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கு, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறையின் கீழ் இயங்கிவரும் நல வாரியங்களில் வழங்கப்படுவதைப் போன்று, இவ்வாரியத்தில் பதிவு செய்துள்ள உறுப்பினர்களுக்கு பல்வேறு நல உதவிகள் வழங்கப்படுகின்றன.

## 15.1 சீர்மரபினர் நல வாரியம்

இவ்வாரியத்தில் பதிவு செய்துள்ள உறுப்பினர்களுக்கு விபத்து நிவாரணம், கல்வி உதவித்தொகை, திருமண உதவித்தொகை, மகப்பேறு உதவித்தொகை மற்றும் முதியோர் ஒய்வூதியம் ஆகிய உதவிகள் வழங்கப்படுகின்றன. இவ்வாரியத்திற்கென இதுவரை ரூ.200 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**சீர்மரபினர் நல வாரியத்தில் பதிவு செய்துள்ள உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் நல உதவிகள்**

| | | | |
|---|---|---|---|
| **1.** விபத்து ஈட்டுறுதித் திட்டத்தின் கீழ் உதவித் தொகை | | | |
| | அ) | விபத்தினால் ஏற்படும் மரணம் | ரூ.1,00,000 |
| | ஆ) | விபத்தினால் ஏற்படும் ஊனம் | ரூ.10,000 முதல் ரூ.1,00,000 வரை |
| 2. | | இயற்கை மரணம் | ரூ.15,000 |
| 3. | | ஈமச்சடங்கு செலவினம் | ரூ.2,000 |

| | | | |
|---|---|---|---|
| 4. கல்வி உதவித்தொகை | | | |
| | அ) | 10 ஆம் வகுப்பு படித்து வரும் பெண் குழந்தைகளுக்கு | ரூ.1,000 |
| | ஆ) | 10 ஆம் வகுப்பு தேர்ச்சிப் பெற்றவர்களுக்கு | ரூ.1,000 |
| | இ) | 11 ஆம் வகுப்பு படித்து வரும் பெண் குழந்தைகளுக்கு | ரூ.1,000 |
| | ஈ) | 12 ஆம் வகுப்பு படித்து வரும் பெண் குழந்தைகளுக்கு | ரூ.1,500 |
| | உ) | 12 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு | ரூ.1,500 |
| | ஊ) | (i) முறையான பட்டப்படிப்பிற்கு | ரூ.1,500 |
| | | (ii) விடுதி வசதியுடன் கூடிய முறையான பட்டப்படிப்பிற்கு | ரூ.1,750 |
| | எ) | (i) முறையான பட்ட மேற்படிப்பிற்கு | ரூ.4,000 |
| | | (ii) விடுதி வசதியுடன் கூடிய முறையான பட்ட மேற்படிப்பிற்கு | ரூ.5,000 |
| | ஏ) | (i) தொழிற்கல்வி பட்டப்படிப்பிற்கு | ரூ.4,000 |

| | | | |
|---|---|---|---|
| | | (ii) விடுதி வசதியுடன் தொழிற்கல்வி பட்டப்படிப்பிற்கு | ரூ.6,000 |
| | ஐ) | (i) தொழிற்கல்வி பட்ட மேற்படிப்பிற்கு | ரூ.6,000 |
| | | (ii) விடுதி வசதியுடன் தொழிற்கல்வி பட்ட மேற்படிப்பிற்கு | ரூ.8,000 |
| | ஒ) | (i) ஐ.டி.ஐ அல்லது தொழிற் பயிற்சிப் படிப்பிற்கு | ரூ.1,000 |
| | | (ii) விடுதி வசதியுடன் ஐ.டி.ஐ அல்லது தொழிற் பயிற்சிப் படிப்பிற்கு | ரூ.1,200 |
| 5. | | திருமண உதவித்தொகை | ரூ.2,000 |
| 6. மகப்பேறு உதவித்தொகை | | | |
| | அ) | மாதம் ஒன்றுக்கு ரூ.1,000 வீதம் 6 மாதங்களுக்கு | ரூ.6,000 |
| | ஆ) | கருச்சிதைவு /கருக்கலைப்பு | ரூ.3,000 |
| 7. | | மூக்குக்கண்ணாடி செலவுத் தொகையை ஈடுசெய்தல் | ரூ.500 வரை |
| 8. | | முதியோர் ஓய்வூதியம் (மாதந்தோறும்) | ரூ.1,000 |

**31.03.2018** வரை இவ்வாரியத்தில் பதிவு செய்த உறுப்பினர்களுக்கு ரூ.**54.99** இலட்சம் மதிப்பிலான நலத் திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

## 15.2 தமிழ்நாடு நரிக்குறவர் நல வாரியம்

இவ்வாரியத்தில் பதிவு செய்துள்ள உறுப்பினர்களுக்கு விபத்து நிவாரணம், கல்வி உதவித்தொகை, திருமண உதவித்தொகை, மகப்பேறு உதவித்தொகை மற்றும் முதியோர் ஓய்வூதியம் ஆகிய உதவிகள் வழங்கப்படுகின்றன.

இவ்வாரியத்தில் பதிவு செய்துள்ள உறுப்பினர்கள் தனிநபராகத் தொழில் துவங்க ரூ.**7,500** மானியமும், குழுவாகத் தொழில் துவங்க அதிகபட்சமாக ரூ.**1,25,000** பின்நிகழ்வு மானியமும் (Back ended subsidy) வழங்கப்படுகிறது. இவ்வாரியத்திற்கென இதுவரை ரூ.**890** இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு நரிக்குறவர் நல வாரியத்தில் பதிவு செய்துள்ள உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் நல உதவிகள்**

| | | | |
|---|---|---|---|
| 1. விபத்து ஈட்டுறுதித் திட்டத்தின் கீழ் உதவித்தொகை | | | |
| | அ) | விபத்தினால் ஏற்படும் மரணம் | ரூ.1,00,000 |
| | ஆ) | விபத்தினால் ஏற்படும் ஊனம் | ரூ.10,000 முதல் ரூ.1,00,000 வரை |
| 2. | | இயற்கை மரணம் | ரூ.15,000 |
| 3. | | ஈமச்சடங்கு செலவினம் | ரூ.2,000 |
| 4. கல்வி உதவித்தொகை | | | |
| | அ) | ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியருக்கு | ரூ.500 |
| | ஆ) | 6 முதல் 9 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியருக்கு | ரூ.1,000 |
| | இ) | 10ஆம் வகுப்பு படித்துவரும் பெண் குழந்தைகளுக்கு | ரூ.1,000 |
| | ஈ) | 10 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு | ரூ.1,000 |
| | உ) | 11 ஆம் வகுப்பு படித்துவரும் பெண் குழந்தைகளுக்கு | ரூ.1,000 |

| | | | |
|---|---|---|---|
| | ஊ) | 12 ஆம் வகுப்பு படித்துவரும் பெண் குழந்தைகளுக்கு | ரூ.1,500 |
| | எ) | 12 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு | ரூ.1,500 |
| | ஏ) | (i) முறையான பட்டப்படிப்பிற்கு | ரூ.1,500 |
| | | (ii) விடுதி வசதியுடன் கூடிய முறையான பட்டப்படிப்பிற்கு | ரூ.1,750 |
| | ஐ) | (i) முறையான பட்ட மேற்படிப்பிற்கு | ரூ.4,000 |
| | | (ii) விடுதி வசதியுடன் கூடிய முறையான பட்ட மேற்படிப்பிற்கு | ரூ.5,000 |
| | ஒ) | (i) தொழிற்கல்வி பட்டப்படிப்பிற்கு | ரூ.4,000 |
| | | (ii) விடுதி வசதியுடன் தொழிற்கல்வி பட்டப்படிப்பிற்கு | ரூ.6,000 |
| | ஓ) | (i) தொழிற்கல்வி பட்ட மேற்படிப்பிற்கு | ரூ.6,000 |
| | | (ii) விடுதி வசதியுடன் தொழிற்கல்வி பட்டமேற்படிப்பிற்கு | ரூ.8,000 |
| | ஔ) | (i) ஐ.டி.ஐ அல்லது தொழிற் பயிற்சிப் படிப்பிற்கு | ரூ.1,000 |

| | | | |
|---|---|---|---|
| | | (ii) விடுதி வசதியுடன் ஐ.டி.ஐ அல்லது தொழிற் பயிற்சிப்படிப்பிற்கு | ரூ.1,200 |
| 5. | | திருமண உதவித்தொகை | ரூ.2,000 |
| 6. | | மகப்பேறு உதவித்தொகை | |
| | அ) | மகப்பேறு மாதம் ஒன்றுக்கு ரூ.1,000 வீதம் 6 மாதங்களுக்கு | ரூ.6,000 |
| | ஆ) | கருச்சிதைவு / கருக்கலைப்பு | ரூ.3,000 |
| 7. | | மூக்குக்கண்ணாடி செலவுத் தொகையை ஈடுசெய்தல் | ரூ.500 வரை |
| 8. | | முதியோர் ஓய்வூதியம் (மாதந்தோறும்) | ரூ.1,000 |

**31.03.2018** வரை இவ்வாரிய உறுப்பினர்களுக்கு ரூ.**759.65** இலட்சம் செலவில் பல்வேறு உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

**2018–2019** ஆம் ஆண்டிற்கு, ரூ.**100** இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 16. வன்னியர் பொதுச் சொத்து நல வாரியம்

தமிழ்நாட்டில், வன்னியர் சமுதாயத்தினரின் முன்னேற்றத்திற்காக, பல வன்னியர் வள்ளல்களால் உயிலாக எழுதி வைக்கப்பட்ட அறக்கட்டளைகளை அடையாளம் கண்டு, அவைகளை ஒருங்கிணைத்து, அவை உருவாக்கப்பட்ட நோக்கத்தினை நிறைவேற்றுவதற்கான வழிவகைகளைக் கண்டறிவதற்காக, அரசு வன்னியர் பொதுச் சொத்து நலவாரியத்தை உருவாக்கியுள்ளது. இதுவரை 18 மாவட்டங்களில் உள்ள 79 வன்னியர் பொதுச் சொத்துக்கள் / அறக்கட்டளைகள் பற்றிய விவரங்கள் கண்டறியப்பட்டுள்ளன.

## 17. சமூக நீதிக்கான தந்தை பெரியார் விருது

சமூக நீதிக்காக மிகச் சிறந்த முறையில் பங்காற்றியவர்களை சிறப்பு செய்யும் பொருட்டு, சமூக நீதிக்கான தந்தை பெரியார் விருது வழங்கப்படுகிறது. இவ்விருது 1994 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது. ஆண்டுதோறும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தேர்வு செய்யப்படும் ஒருவருக்கு இவ்விருது வழங்கப்படுகிறது. இவ்விருது ஒரு சவரன் தங்கப் பதக்கமும்,

ரூ.1 இலட்சம் பொற்கிழியும் கொண்டதாகும். 2017 ஆம் ஆண்டு சமூக நீதிக்கான தந்தை பெரியார் விருது திருமதி பா.வளர்மதி அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

2018–2019 ஆம் ஆண்டிற்கு ரூ.1.50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 18. தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம்

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்தவர்கள் சுயதொழில் மேற்கொள்ள குறைந்த வட்டி விகிதத்தில் கடன் வழங்கும் நோக்கத்துடன் 1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் நிறுவப்பட்டது. இது நிறுமச்சட்டம் 1956–ன் கீழ் பதிவுபெற்ற, ஒரு அரசுத்துறை நிறுவனமாகும். இந்நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ.30 கோடி. இதன் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ.12.27 கோடி. இந்நிறுவனம், தேசிய பிற்படுத்தப்பட்டோர் நிதி மற்றும் வளர்ச்சிக் கழகத்தின் மாநில முகமையாக செயல்பட்டு

வருகிறது. இக்கழகம் செயற்படுத்தும் பல்வேறு கடன் திட்டங்களுக்கான நிதியை, தேசிய பிற்படுத்தப்பட்டோர் நிதி மற்றும் வளர்ச்சிக் கழகத்திடமிருந்து, தமிழ்நாடு அரசின் பொறுப்புறுதியின் மீது கடனாகப்பெறுகிறது.

சென்னை எழும்பூர் வட்டத்தில், நில கிரயமின்றி அரசு வழங்கிய நிலத்தில் ரூ.2.84 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்ட சொந்தக் கட்டடத்தில் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் செயல்பட்டு வருகிறது.

**18.1 கடன் திட்டங்கள்**

இக்கழகம் வழங்கும் கடனுதவியில், தேசிய பிற்படுத்தப்பட்டோர் நிதி மற்றும் வளர்ச்சிக்கழகம், தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக்கழகம் மற்றும் பயனாளியின் பங்குத்தொகை ஆகியவை அடங்கும். கடன் திட்டங்களுக்கான பயனாளிகளை, அந்தந்த மாவட்ட கூட்டுறவு சங்கங்களுக்கான இணைப்பதிவாளர், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையின நல அலுவலர், மாவட்ட தொழிற்மையத்தின் பொது மேலாளர் மற்றும் அந்தந்த மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் மேலாண்மை இயக்குநர் ஆகியோரைக் கொண்ட குழு தெரிவு செய்கிறது.

கடன் திட்டங்களுக்கான அனுமதி மற்றும் நிதி, கூட்டுறவு வங்கிகள் / கூட்டுறவு சங்கங்கள் மூலம் விடுவிக்கப்படுகிறது.

கடன் திட்டங்களுக்கான குடும்ப ஆண்டு வருமான வரம்பு கிராமப்புறங்களில் ரூ.98,000 லிருந்து ரூ.3,00,000 ஆகவும், நகர்ப்புறங்களில் ரூ.1,20,000–லிருந்து ரூ.3,00,000 ஆகவும் 1.4.2018 முதல் உயர்த்தப்பட்டுள்ளது.

### 18.1.1 பொது காலக்கடன் திட்டம்

இத்திட்டத்தின் கீழ் சிறு வணிகம் செய்வதற்கு ஒரு பயனாளிக்கு அதிகபட்சம் ரூ.5 இலட்சம் வரை ஆண்டுக்கு 6 விழுக்காடு வட்டி விகிதத்தில் கடனுதவி வழங்கப்படுகிறது. ரூ.5 இலட்சத்திற்கு மேல் ரூ.10 இலட்சம் வரை ஆண்டுக்கு 7 விழுக்காடு வட்டி விகிதத்தில் கடனுதவி வழங்கப்படுகிறது. கடனை திரும்ப செலுத்தும் கால அவகாசம் 3 முதல் 8 ஆண்டுகளாகும்.

### 18.1.2 பெண்களுக்கான புதிய பொற்காலத் திட்டம்

பெண்களின் சுயசார்பு பண்பினை வளர்க்கும் நோக்குடன் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் சிறு வணிகம் செய்வதற்கு ஒரு பயனாளிக்கு அதிகபட்சம் ரூபாய் ஒரு இலட்சம் வரை ஆண்டுக்கு 5 விழுக்காடு வட்டி விகிதத்தில் கடனுதவி வழங்கப்படுகிறது. கடனை திரும்ப செலுத்தும் கால அவகாசம் 3 முதல் 8 ஆண்டுகளாகும்.

### 18.1.3 பெண்களுக்கான நுண் கடன் திட்டம்

இத்திட்டத்தின் கீழ் மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் தனியாகவோ அல்லது குழுவாகவோ சிறுதொழில் / வணிகம் செய்வதற்கு கடன் வழங்கப்படுகிறது. உறுப்பினர் ஒருவருக்கு அதிகபட்சம் ரூ.60,000 வரை ஆண்டுக்கு 4 விழுக்காடு வட்டி விகிதத்தில் கடனுதவி வழங்கப்படுகிறது. கடனை திரும்ப செலுத்தவேண்டிய கால அவகாசம் 4 ஆண்டுகளாகும்.

### 18.1.4 ஆண்களுக்கான நுண் கடன் திட்டம்

இத்திட்டத்தின் கீழ் ஆண்கள் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் தனியாகவோ அல்லது குழுவாகவோ சிறுதொழில் / வணிகம் செய்வதற்கு கடன் வழங்கப்படுகிறது. உறுப்பினர் ஒருவருக்கு அதிகபட்சம் ரூ.60,000 வரை ஆண்டுக்கு 5 விழுக்காடு வட்டி விகிதத்தில்

கடனுதவி வழங்கப்படுகிறது. கடனை திரும்ப செலுத்தவேண்டிய கால அவகாசம் 4 ஆண்டுகளாகும்.

இத்திட்டங்களின் கீழ், 2017–2018 ஆம் ஆண்டில் 17,468 பயனாளிகளுக்கு ரூ.7,924.25 இலட்சம் பின்வருமாறு வழங்கப்பட்டது.

| வ. எண். | திட்டத்தின் பெயர் | பயனாளிகள் எண்ணிக்கை | கடன்தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | நுண் கடன் திட்டங்கள் | 16,641 | 7,483.55 |
| 2. | பொதுக்கால கடன் திட்டம் | 709 | 392.32 |
| 3. | மகளிர் புதிய பொற்கால திட்டம் | 118 | 48.38 |
| மொத்தம் | | 17,468 | 7,924.25 |

2018–2019 ஆம் ஆண்டிற்கு பல்வேறு திட்டங்களின் கீழ், ரூ.100 கோடி அளவில் கடன் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

## 18.2 சிறு, குறு விவசாயிகளுக்கான மானியம் மற்றும் கடன் திட்டம்

பொருளாதாரத்தில் பின்தங்கிய பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பினைச் சார்ந்த சிறு, குறு விவசாயிகளுக்கு நீர்ப்பாசன வசதி

ஏற்படுத்த மானியத்துடன் கூடிய கடன் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ், தேர்வு செய்யப்படும் பயனாளிகளுக்கு கூட்டுறவு வங்கிகள் / தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் **50** விழுக்காடு மானியத்துடன் அதிகபட்சம் **ரூ.1,00,000** வரை கடன் வழங்கப்படுகிறது. இதுவரை **2,799** சிறு, குறு விவசாயிகளுக்கு மானியமாக **ரூ.1,273.80** இலட்சம் விடுவிக்கப்பட்டுள்ளது.

**2012–2013** ஆம் ஆண்டு முதல் தேசிய பிற்படுத்தப்பட்டோர் நிதி மற்றும் வளர்ச்சிக் கழகம், சிறு விவசாயிகள் மற்றும் காய்கறிகள் பயிரிடுவோருக்கான சிறு கடன் திட்டம், மரபுசார் கலைஞர்கள் மற்றும் கைவினைஞர்களுக்கான சுய தொழில் காலக் கடன் திட்டம், இளம் தொழிற் பட்டதாரிக்கான காலக் கடன் திட்டம் ஆகிய புதிய கடன் திட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளது.

## 19. தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையம்

இந்திரா சஹானி மற்றும் பிறர் – எதிர் – இந்திய யூனியன் மற்றும் பிறர் (J.T. 1992 (6) SC 273) என்கிற மண்டல் வழக்கில் உச்ச நீதிமன்றம் அளித்த

வழிகாட்டுதல்களின் அடிப்படையில் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் கூறு **16(4)**ன் கீழ், கூறு **340** உடன் படிக்கப்பட்டு, ஒரு நிலையான அமைப்பாக தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் அமைக்கப்பட்டு, **15.3.1993** முதல் ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதியரசரின் தலைமையில் செயல்பட்டு வருகிறது.

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தின் பணிகள் நீதிமுறை–சார்புடைய (quasi-judicial) தன்மை வாய்ந்தது. இவ்வாணையத்தின் செயல்–வரம்புகளாவன:-

(i) பிற்படுத்தப்பட்டோர் / மிகப்பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கக் கோருதல் தொடர்பான மனுக்கள் மற்றும் பட்டியல்களில் மிகுதியாகச் சேர்க்கப்பட்டிருத்தல் அல்லது சேர்க்கப்படாமலிருத்தல் குறித்தான முறையீடுகள் ஆகியவற்றைப் பெற்று, ஆய்வு செய்து மற்றும் அதன்மீது பரிந்துரைகளை ஆணையம் வழங்குதல்.

(ii) அவ்வப்போது எடுக்கப்படும் முடிவுகளின்படி, பிற்படுத்தப்பட்டோர் / மிகப்பிற்படுத்தப்பட்டோர் பட்டியல்களை காலமுறைப்படி சீராய்வு செய்தல்.

(iii) இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் கூறு **16(4)** மற்றும் இதர பிற தொடர்புடைய கூறுகளின் அடிப்படையிலும், இப்பொருள் தொடர்பாக உச்சநீதிமன்றம் எடுத்துள்ள பல்வேறு முடிவுகளையொட்டியும் ஆணையத்தின் பரிந்துரைகள் அமைய வேண்டும்.

(iv) அவ்வப்போது அரசால் பரிந்துரை கோரப்படும் பிற்படுத்தப்பட்டோர் தொடர்பான பொருள்கள் பிறவற்றையும் ஆய்வுசெய்து பரிந்துரை வழங்குதல்.

இவ்வாணையம் ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி, நீதியரசர் திரு. எம்.எஸ். ஜனார்த்தனம் அவர்கள் தலைமையில் **8** உறுப்பினர்களுடன், **28.12.2015** அன்று **3** ஆண்டுகள் பதவிக்காலத்துடன் திருத்தியமைக்கப் பட்டுள்ளது.

## 20. சிறுபான்மையினர் நலன்

சிறுபான்மையின மக்களின் சமூக, கல்வி மற்றும் பொருளாதார நிலைகளை மேம்படுத்துவதில் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாக திகழ்கிறது. சிறுபான்மையின மக்களை பெரும்பான்மையினருக்கு நிகராக உயர்த்திடும் நோக்கில் இவ்வரசு பல்வேறு நலத்திட்டங்களை முனைப்போடு செயல்படுத்தி வருகிறது.

### 20.1 தனி இடஒதுக்கீடு

பிற்படுத்தப்பட்டோர் இனத்தவர்களுக்கான **30** விழுக்காடு இடஒதுக்கீட்டிலிருந்து பிற்படுத்தப்பட்ட வகுப்பு முஸ்லிம்களுக்கு **3.5** விழுக்காடு தனி இடஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது. அரசுப் பணிகளில் நேரடி நியமனங்களில் பிற்படுத்தப்பட்ட வகுப்பு முஸ்லிம்களுக்கு முன்கொணர்வு முறையினை (Carry forward procedure) பின்பற்றிட வேண்டும் என அரசு ஆணையிட்டுள்ளது.

### 20.2 கல்வி உதவித் தொகை

கிறித்தவர், இஸ்லாமியர், சீக்கியர், புத்த மதத்தினர், பார்சி மற்றும் ஜெயின் மதங்களைச் சார்ந்த மாணவ /

மாணவியருக்கு மத்திய அரசின் கீழ்க்கண்ட கல்வி உதவித் தொகை திட்டங்களை இவ்வரசு தொடர்ந்து செவ்வனே செயல்படுத்தி வருகிறது.

1. பள்ளிப்படிப்பு கல்வி உதவித் தொகை திட்டம்
2. பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித் தொகை திட்டம்
3. தகுதி மற்றும் வருவாய் அடிப்படையிலான கல்வி உதவித் தொகை திட்டம்

இக்கல்வி உதவி தொகைத் திட்டங்களால் அரசு, அரசு உதவிபெறும் மற்றும் அரசால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் கல்வி நிலையங்களிலும் ஒன்றாம் வகுப்பு முதல் தொழிற்கல்வி/ஆராய்ச்சி படிப்பு வரை பயிலும் மாணவ, மாணவியர் பயன் பெறுகின்றனர். பெற்றோர் / பாதுகாவலரின் ஆண்டு வருமான வரம்பு, பள்ளிப்படிப்பு கல்வி உதவித் தொகை திட்டத்திற்கு ரூ.1 இலட்சத்திற்கு மிகாமலும், பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித் தொகை திட்டத்திற்கு ரூ.2 இலட்சத்திற்கு மிகாமலும், தகுதி மற்றும் வருவாய் அடிப்படையிலான கல்வி உதவித் தொகை திட்டத்திற்கு ரூ.2.50 இலட்சத்திற்கு மிகாமலும் இருத்தல் வேண்டும். முந்தைய ஆண்டின் இறுதித் தேர்வில்

50 விழுக்காட்டிற்கு குறையாமல் மதிப்பெண்கள் பெற்றிருக்கும் மாணவ / மாணவியர் இத்திட்டங்களின் கீழ் பயன்பெறுவர். மொத்த ஒதுக்கீட்டில் 30 விழுக்காடு மாணவியருக்கென ஒதுக்கீடு செய்யப்படும். மேற்படி திட்டங்களின் கீழ் கல்வி உதவித்தொகை நேரடி பயன்மாற்று முறையில் (DBT-Direct Benefit Transfer) மாணவ/மாணவியரின் வங்கி கணக்கில் நேரடியாக செலுத்தப்படுகிறது.

### 20.2.1 பள்ளிப்படிப்பு கல்வி உதவித் தொகை

இக்கல்வி உதவித் தொகை ஒன்றாம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரை பயிலும் சிறுபான்மையின மாணவ / மாணவியருக்கு மத்திய அரசின் 100 சதவீதம் நிதி பங்களிப்புடன் ஒப்பளிப்பு செய்யப்படுகிறது.

ஆறாம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரை பயில்பவர்களுக்கு ஆண்டொன்றுக்கு சேர்க்கை கட்டணம் ரூ.500 வரையிலும், கற்பிப்புக் கட்டணம் ரூ.3500 வரையிலும் வழங்கப்படுகிறது. தவிர, பராமரிப்பு கட்டணமாக, 1 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை விடுதியில் தங்காமல் பயில்பவர்களுக்கு மாதம் ரூ.100 வீதமும், 6ஆம் வகுப்பு

முதல் 10 ஆம் வகுப்பு வரை விடுதியில் தங்கி பயில்பவர்களுக்கு மாதம் ரூ.600 வீதமும், ஒரு கல்வி ஆண்டில் அதிகபட்சமாக 10 மாதங்களுக்கு வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் 2017–2018 ஆம் ஆண்டில் 3,53,184 மாணவ, மாணவியருக்கு கல்வி உதவித்தொகையாக ரூ.6,927.42 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

### 20.2.2 பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித் தொகை

இக்கல்வி உதவித் தொகை பதினோறாம் வகுப்பு முதல் ஆராய்ச்சி படிப்பு வரை பயிலும் சிறுபான்மையின மாணவ, மாணவியருக்கு மத்திய அரசின் 100 சதவீத நிதியுதவியுடன் ஒப்பளிப்பு செய்யப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் பாடப்பிரிவிற்கு ஏற்றவாறு கல்வி உதவித்தொகையில் சேர்க்கை மற்றும் கற்பிப்புக் கட்டணத்திற்காக ரூ.3,000 முதல் ரூ.10,000 வரையிலும், பராமரிப்புக் கட்டணத்திற்காக விடுதியில் தங்காமல் பயில்பவர்களுக்கு ரூ.2,300 முதல் ரூ.5,500 வரையிலும், விடுதியில் தங்கி பயில்பவர்களுக்கு ரூ.3,800 முதல்

ரூ.12,000 வரையிலும் ஒரு கல்வி ஆண்டிற்கு வழங்கப்படுகிறது.

2017–2018 ஆம் ஆண்டில் 39,193 மாணவ, மாணவியருக்கு கல்வி உதவித்தொகையாக ரூ.2,179.23 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

### 20.2.3 தகுதி மற்றும் வருவாய் அடிப்படையிலான கல்வி உதவித் தொகைத் திட்டம்

தொழிற்கல்வி / தொழில்நுட்பக் கல்வி பயிலும் சிறுபான்மையின மாணவ மாணவியர் அதிக அளவில் மதிப்பெண்கள் பெற்று கல்வி பயில்வதை ஊக்குவிக்கும் நோக்கில் மைய அரசின் 100 சதவீத நிதியுதவியுடன் இக்கல்வி உதவித் தொகைத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

அரசு, அரசு உதவி பெறும் மற்றும் அரசால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் கல்லூரிகளில் தொழிற்கல்வி மற்றும் தொழில்நுட்பக் கல்வி பயிலும் மாணவ / மாணவியருக்கு அதிகபட்சமாக ரூ.20,000 வரை கல்வி கட்டணம் வழங்கப்படுகிறது. சிறுபான்மையினர் விவகார அமைச்சகத்தால் அறிவிக்கப்பட்ட கல்வி நிறுவனங்களில்

பயில்பவர்களுக்கு எவ்வித வரம்பின்றி கல்வி கட்டணம் மீள வழங்கப்படுகிறது. மேலும், பராமரிப்புக் கட்டணமாக ஆண்டொன்றுக்கு விடுதியில் தங்காமல் பயில்பவர்களுக்கு ரூ.5,000 மற்றும் விடுதியில் தங்கி பயில்பவர்களுக்கு ரூ.10,000 வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் 2017–2018 ஆம் ஆண்டில் 6,105 மாணவ/மாணவியருக்கு கல்வி உதவித்தொகையாக ரூ.1,572.19 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

### 20.3.1 சிறுபான்மையினர் விடுதிகள்

பள்ளி / கல்லூரிகளில் பயிலும் சிறுபான்மையினர் வகுப்பைச் சேர்ந்த ஏழை மாணவ / மாணவியர்கள் பயன்பெறும் வகையில் எவ்வித கட்டணமும் இன்றி உணவு மற்றும் உறைவிட வசதிகளுடன் சென்னை, வேலூர், கிருஷ்ணகிரி, கோயம்புத்தூர், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, திண்டுக்கல், மதுரை, தேனி, திருநெல்வேலி, இராமநாதபுரம் மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் மொத்தம் 16 விடுதிகள் செயல்பட்டு வருகின்றன.

சிறுபான்மையின மாணவ/மாணவியரின் பொது அறிவினை வளர்த்திடும் வகையில் தினந்தோறும் இரண்டு

தமிழ் நாளிதழ்கள் மற்றும் ஒரு ஆங்கில நாளிதழ் வழங்கப்படுகிறது. விடுதிகளில் நூலக வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. 10 மற்றும் 12 ஆம் வகுப்பு அரசு பொதுத்தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெறுவதற்காக சிறப்பு வழிகாட்டி நூல்கள் வழங்கப்படுகின்றன. 2017–2018 ஆம் ஆண்டில் 10 மற்றும் 12ஆம் வகுப்பு மற்றும் கல்லூரி விடுதி மாணவ, மாணவியருக்கு வாழ்க்கை வழிகாட்டி நிகழ்ச்சிகள் மூலம் பல்வேறு வேலைவாய்ப்புகள் மற்றும் வேலை பெறுவதற்கான தகுதிபடுத்தல் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது. விடுதி மாணவ, மாணவியருக்கு வருடத்திற்கு மூன்று மருத்துவ பரிசோதனைகள் செய்யப்பட்டு வருகின்றன. வண்ண தொலைக்காட்சிப்பெட்டி, குடிநீர் சுத்திகரிப்பு கருவிகள், சூரிய ஒளி மூலம் நீரை சூடாக்கும் கருவிகள், மின் தடையற்ற இன்வெட்டர்கள் போன்ற வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

மேற்கண்ட விடுதிகளின் உணவு கட்டணம், நிர்வாகம், பராமரிப்பு மற்றும் பிற பணிகளுக்காக 2017–2018 ஆம் ஆண்டில் ரூ.324.54 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

இச்செலவினங்களுக்காக **2018–2019** ஆம் ஆண்டிற்கு ரூ.**372.43** இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 20.3.2 வேலைக்குச் செல்லும் இஸ்லாமிய பெண்கள் தங்கும் விடுதி

சென்னையில் வக்ஃபு வாரியத்திற்குச் சொந்தமான இடத்தில், வேலைக்குச் செல்லும் இஸ்லாமிய சமுதாயத்தைச் சார்ந்த பெண்கள் தங்குவதற்காக, மகளிர் விடுதி ஒன்று அரசு நிதியுதவியுடன் கட்டப்பட உள்ளது.

### 20.4 முஸ்லிம் மகளிர் உதவும் சங்கம்

இஸ்லாமிய சமுதாயத்தைச் சார்ந்த ஏழ்மை நிலையிலுள்ள ஆதரவற்ற கணவரால் கைவிடப்பட்ட மற்றும் வயதான பெண்களுக்கு உதவிடும் வகையில் அனைத்து மாவட்ட தலைநகரங்களில் மாவட்ட ஆட்சித் தலைவரை பதவி வழி தலைவராக கொண்டு மாவட்ட முஸ்லிம் மகளிர் உதவும் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டு சங்கங்களின் பதிவு சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன. இச்சங்கங்கள் நன்கொடை மூலம் திரட்டும் நிதி ஆதாரத்திற்கேற்ப இணை மானியம் இரு மடங்காக **1:2** என்ற விகிதாச்சாரத்தில்

அதிகபட்சமாக ரூ.20 இலட்சம் வரை வழங்கப்பட்டு வருகின்றது.

இச்சங்கங்களின் நிதி ஆதாரங்களின் மூலம் ஆதரவற்ற, வயதான முஸ்லிம் விதவைகள் மற்றும் மிகவும் ஏழ்மை நிலையில் வாழும் முஸ்லிம் மகளிர் ஆகியோர்களுக்கு உதவிடும் வகையில் நிதி உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது. தவிர தையல் பூ–வேலைபாடுகள், காலணிகள், கைவினை பொருட்கள் செய்வதற்கான பயிற்சிகள் மற்றும் தேவைக்கேற்ப இதர பயிற்சிகளும் கட்டணமின்றி வழங்கப்பட்டு வருகிறது. இச்சங்கங்களுக்கு 2017–2018 ஆம் ஆண்டில் அரசின் இணை மானியமாக ரூ.104.05 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

2018–2019 ஆம் ஆண்டிற்கு ரூ.100 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. முஸ்லிம் மகளிர் உதவும் சங்கங்கள் திரட்டும் நன்கொடைகளுக்கு ஏற்ப இணை மானியத்தினை இருமடங்காக வழங்குவதற்கான அரசின் ஒதுக்கீடு அதிகரிக்கப்படும்.

**20.5 பாரதப் பிரதமரின் புதிய 15 அம்ச திட்டம்**

சிறுபான்மையினரின் மக்கட்தொகைக்கேற்ப பொருளாதார மேம்பாட்டிற்காக செயல்படுத்தப்படும் திட்டங்களின் கீழ் நிர்ணயிக்கும் இலக்கில் உரிய பங்கு சிறுபான்மையின மக்களுக்கு சென்றடைவதை உறுதி செய்திடும் வகையில் பாரதப் பிரதமரின் புதிய 15 அம்ச திட்டம் நம் தமிழகத்தில் செயல்படுத்தப்பட்டு அதன் முன்னேற்றங்கள் கண்காணிக்கப்பட்டு வருகின்றது.

சிறுபான்மையின மக்களுக்கு ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்ட சேவைகளின் பயன், வேலைவாய்ப்புகள், கல்வி உதவித்தொகை வழங்குதல், சுய வேலை வாய்ப்புத் திட்டம், தொழில் நுட்பப் பயிற்சிகள் மூலம் திறனை மேம்படுத்துதல், மாநில மற்றும் மைய அரசின் கீழ் வேலைவாய்ப்பு, சிறுபான்மையினர் வசிக்கும் குடிசைப் பகுதிகளின் நிலையை மேம்படச் செய்தல், இனக்கலவரத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மறுவாழ்வு உதவி வழங்குதல், இனக்கலவரங்களைத் தடுத்தல் மற்றும் கட்டுப்படுத்துதல் ஆகியவை இத்திட்டத்தின் சீரிய நோக்கங்கள் ஆகும்.

இத்திட்டம் முறையாக செயலாக்கப்படுவதைக் கண்காணிக்க மாநில அளவில் தலைமைச் செயலர் அவர்கள் தலைமையில் ஓர் உயர்நிலைக் குழுவும், மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் ஒரு குழுவும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

## 20.6 மறுவாழ்வு நிதி உதவி வழங்குதல்

இனக்கலவரங்களால் பொருளாதார மற்றும் உடல் ரீதியாக பாதிக்கப்பட்டு வாழ்வாதாரத்தை இழந்து நிற்கும் சிறுபான்மையின சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் மற்றும் சிறு குற்றங்களுக்காக சிறைதண்டனை பெற்றவர்கள், சமுதாயத்தில் கண்ணியமான வாழ்க்கை நடத்திட உதவும் வகையில் சிறுவணிகம் தொடங்குவதற்கு ஒரு குடும்பத்திற்கு ரூ.10 ஆயிரம் வரை நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது.

## 20.7 ஜெருசலேம் புனித பயணத்திற்கான நிதியுதவி

தமிழ்நாட்டிலுள்ள அனைத்து கிறித்துவ பிரிவினரும் இஸ்ரேலில் உள்ள ஜெருசலேமிற்கு புனித பயணம் செல்வதற்கு நிதியுதவி வழங்கும் திட்டம் **2011–2012** ஆம் ஆண்டில் துவக்கப்பட்டு, ஒவ்வொரு வருடமும் **500**

பயனாளிகளுக்கு தலா ரூ.20,000 வீதம் ரூ. 1 கோடி நிதி உதவி வழங்கப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின்கீழ் இதுவரையில் ரூ.560 இலட்சம் நிதி உதவி பெற்று 2,800 கிறித்துவர்கள் ஜெருசலேம் புனித பயணம் மேற்கொண்டுள்ளனர்.

இத்திட்டத்திற்கென 2018–2019 ஆம் ஆண்டில் ரூ.1 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 20.8 கிறித்துவ தேவாலயங்கள் புனரமைத்தல் மற்றும் பழுது நீக்குதலுக்கான மானிய உதவி அளிக்கும் திட்டம்

தமிழகத்தில் உள்ள கிறித்துவ தேவாலயங்கள் புனரமைத்தல் மற்றும் பழுது நீக்குதலுக்கான மானிய உதவி அளிக்கும் திட்டம் அரசால் 2016–2017 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் 2017–2018 ஆம் ஆண்டில் 9 கிறித்துவ தேவாலயங்களுக்கு ரூ.21.70 இலட்சம் மானியமாக ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்காக 2018–2019 ஆம் ஆண்டிற்கு ரூ.1 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 20.9 உலமாக்கள் மற்றும் இதர பணியாளர்கள் நல வாரியம்

இஸ்லாமியர்களின் பள்ளிவாசல்கள், மதரசாக்களில் பணிபுரியும் ஆலிம்கள், பேஷ் இமாம்கள், அரபி ஆசிரியர்கள்/ஆசிரியைகள், மோதினார்கள், பிலால்கள் மற்றும் தர்க்காக்கள், ஆஷூர்கானாக்கள், அடக்கத்தலங்கள், தைக்காக்கள், முஸ்லிம் அனாதை இல்லங்கள் ஆகியவற்றில் பணிபுரியும் பணியாளர்களின் பொருளாதாரம் மற்றும் கல்வி நிலைகள் முன்னேற்றம் அடைவதற்காக உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியம் உருவாக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றது. இவ்வாரியத்தில் இதுவரை 14,242 உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டு அவர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

**இவ்வாரியத்தில் பதிவு செய்துள்ள உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் நல உதவிகள் விவரம்**

| வ. எண். | நிதி உதவிகள் விவரம் | உதவித்தொகை |
|---|---|---|
| I | **விபத்து ஈட்டுறுதித்திட்டத்தின் கீழ்** | |
| | 1. விபத்தினால் மரணம் ஏற்பட்டால் உதவித்தொகை | ரூ.1,00,000 |
| | 2. விபத்தினால் ஊனம் ஏற்பட்டால் ஊனத்தின் தன்மைக்கேற்ப | ரூ.10,000 முதல் ரூ.1,00,000 வரை |

| | | |
|---|---|---|
| II | இயற்கை மரணத்திற்கான உதவித்தொகை | ரூ.15,000 |
| III | ஈமச்சடங்கு செலவிற்கான உதவித்தொகை | ரூ.2,000 |
| IV | **<u>கல்வி உதவித்தொகை</u>**<br>1) 10 ஆம் வகுப்பு படித்து வரும் பெண் குழந்தைக்கு | ரூ.1,000 |
| | 2) 10 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு | ரூ.1,000 |
| | 3) 11 ஆம் வகுப்பு படித்து வரும் பெண் குழந்தைக்கு | ரூ.1,000 |
| | 4) 12 ஆம் வகுப்பு படித்து வரும் பெண் குழந்தைக்கு | ரூ.1,500 |
| | 5) 12 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவருக்கு | ரூ.1,500 |
| | 6) முறையான பட்டப்படிப்பு | ரூ.1,500 |
| | 7) மாணவர் இல்ல வசதியுடன் முறையான பட்டப்படிப்பு | ரூ.1,750 |
| | 8) முறையான பட்ட மேற்படிப்புக்கு | ரூ.4,000 |
| | 9) மாணவர் இல்ல வசதியுடன் முறையான பட்ட மேற்படிப்புக்கு | ரூ.5,000 |
| | 10) தொழிற்கல்வி பட்ட படிப்புக்கு | ரூ.4,000 |
| | 11) மாணவர் இல்ல வசதியுடன் தொழிற்கல்வி பட்ட படிப்பு | ரூ.6,000 |

| | | |
|---|---|---|
| | 12) தொழிற்கல்வி பட்ட மேற்படிப்பு | ரூ.6,000 |
| | 13) மாணவர் இல்ல வசதியுடன் தொழிற்கல்வி பட்ட மேற்படிப்பு | ரூ.8,000 |
| | 14) ஐ.டி.ஐ அல்லது பாலிடெக்னிக் படிப்பு | ரூ.1,000 |
| | 15) மாணவர் இல்ல வசதியுடன் ஐடிஐ அல்லது பாலிடெக்னிக் படிப்பு | ரூ.1,200 |
| V | திருமண உதவித்தொகை | ரூ.2,000 |
| VI. | மகப்பேறு உதவித்தொகை<br>அ. மகப்பேறு மாதம் ஒன்றுக்கு ரூ.1,000 வீதம்<br>(6 மாதங்களுக்கு)<br><br>ஆ. கருச்சிதைவு/கருக்கலைப்பு | <br>ரூ.6,000<br><br><br>ரூ.3,000 |
| VII. | கண் கண்ணாடி செலவுத் தொகையை ஈடு செய்தல் | ரூ.500 (அதிகபட்சம்) |
| VIII. | முதியோர் ஓய்வூதியம் மாதந்தோறும் | ரூ.1,000<br>(ஒரு மாதத்திற்கு) |

இவ்வாரியத்தின் மூலம் இதுவரை **3,239** பயனாளிகளுக்கு ரூ.**83.93** இலட்சம் உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது.

## 21. தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையம்

தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையம், மதவழி மற்றும் மொழிவழி சிறுபான்மையினர் உரிமைகளையும், நலன்களையும் பாதுகாக்கும் பொருட்டு அமைக்கப்பட்ட சட்டபூர்வமான அமைப்பாகும்.

இந்த ஆணையம் சிறுபான்மையினத்தவரை பாதுகாத்திட இந்திய அரசியலமைப்புச் சட்டம் மற்றும் மாநில அரசால் நிறைவேற்றப்பட்டுள்ள சட்டங்களின் மூலம் அளிக்கப்பட்டுள்ள பாதுகாப்புகள் செயல்படும் விதத்தை ஆய்வு செய்தல், கண்காணித்தல், சிறுபான்மையினர் தொடர்பாக அரசு மேற்கொள்ள உத்தேசிக்கும் சட்டம் மற்றும் நலத்திட்டங்கள் குறித்து உரிய கருத்துக்களைத் தெரிவித்தல், மாநிலத்தில் மதநல்லிணக்கத்தை உறுதிப்படுத்தல், பராமரித்தல் மற்றும் மேம்படுத்துதலுக்கான வழிவகைகளை அரசுக்குப் பரிந்துரைத்தல் போன்ற செயல்பாடுகளை மேற்கொள்கிறது.

தற்போதைய ஆணையம், பேராயர் டாக்டர் எம்.பிரகாஷ் அவர்களை தலைவராகக் கொண்டு **6** உறுப்பினர்களுடன்

**01.01.2016** முதல் மூன்றாண்டு காலத்திற்கு திருத்தி அமைக்கப்பட்டுள்ளது.

## 22. தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம்

தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம், பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள இஸ்லாமியர்கள், கிறித்துவர்கள், புத்த மதத்தினர், சீக்கியர்கள், பார்சீயர்கள் மற்றும் ஜெயின் பிரிவைச் சார்ந்த மதவழி சிறுபான்மையின மக்கள் சுயதொழில் மேற்கொள்ள குறைந்த வட்டி விகிதத்தில் கடன் வழங்கும் நோக்கத்துடன் **1999** ஆம் ஆண்டு அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இது நிறுமச் சட்டம் **1956**–ன் கீழ் பதிவுபெற்ற, ஒரு அரசுத் துறை நிறுவனமாகும். இந்நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ.**5** கோடியாகும். இந்நிறுவனத்தின் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ.**2.05** கோடியாகும். இந்நிறுவனம் தேசிய சிறுபான்மையினர் வளர்ச்சி மற்றும் நிதி கழகத்தின் மாநில முகமையாக செயல்பட்டு வருகிறது. இக்கழகம் செயல்படுத்தும் பல்வேறு கடன் திட்டங்களுக்கான நிதியை, தேசிய சிறுபான்மையினர்

வளர்ச்சி மற்றும் நிதிக் கழகத்திடமிருந்து, அரசின் பொறுப்புறுதியின் மீது கடனாகப்பெற்று வழங்குகிறது.

## 22.1 கடன் திட்டங்கள்

இக்கழகம் வழங்கும் கடனுதவியில், தேசிய சிறுபான்மையினர் வளர்ச்சி மற்றும் நிதிக் கழகம், தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக்கழகம் மற்றும் பயனாளிகளின் பங்குத்தொகை ஆகியவை அடங்கும். இக்கழகம் கூட்டுறவு வங்கிகள்/கூட்டுறவு சங்கங்கள் மூலம் கடன் திட்டங்களுக்கான அனுமதி மற்றும் நிதியை பட்டுவாடா செய்கிறது.

### 22.1.1 தனிநபர் காலக்கடன் திட்டம்

பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள சிறுபான்மையின மக்கள் சுயமாக தொழில் / வியாபாரம் செய்து தங்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் பொருட்டு தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் மூலம் பின்வருமாறு தனிநபர் காலக் கடன்கள் வழங்கப்படுகிறது.

| வ. எண். | கடன் தொகை | வட்டி விகிதம் | ஆண்டு வருமான உச்சவரம்பு |
|---|---|---|---|
| 1. | ரூ.50,000 வரை | 5% | கிராமப்புறங்களுக்கு ரூ.98,000<br>நகர்ப்புறங்களுக்கு ரூ.1,20,000 |
| 2. | ரூ.50,001 முதல் ரூ.20,00,000 வரை | 6% | |
| 3. | ரூ.30,00,000 வரை | ஆண்களுக்கு 8%<br>பெண்களுக்கு 6% | ரூ.1,20,000 மேற்பட்டு ரூ.6,00,000 வரை (கிராம மற்றும் நகர்ப்புறங்கள்) |

சிறுபான்மையினர் ஒன்று சேர்ந்து தொழில் மற்றும் வணிகத்துறையின் மூலம் தொழில் கூட்டுறவு சங்கங்களை அமைத்து அதன் மூலம் ஆட்டோ ரிக்ஷாக்களை வாங்கிட ஆண்டிற்கு 6 விழுக்காடு என்ற வட்டி விகிதத்தில் தாய்கோ வங்கி (TAICO BANK) மூலம் ஆட்டோ கடன் வழங்கப்படுகிறது.

ஆவின் நிறுவனம் மூலமாக இரண்டு கலப்பினப் பசுக்கள் வாங்குவதற்கு ரூ.50,000 அல்லது இரண்டு உயர்ரக எருமைகள் வாங்குவதற்கு ரூ.70,000 கடன் உதவி

ஆண்டிற்கு 6 விழுக்காடு வட்டி விகிதத்தில் வழங்கப்படுகிறது.

இத்திட்டங்களின் கீழ் 2017–2018 ஆம் ஆண்டில் 1,285 பயனாளிகள் பயனடையும் வகையில் ரூ.1,214.26 இலட்சம் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

### 22.1.2 சுய உதவி குழுக்கள் மூலம் சிறுகடன் திட்டம்

தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலம், சுய உதவிக்குழு உறுப்பினர்கள் (ஆண் மற்றும் பெண் சுயஉதவிக்குழு உறுப்பினர்கள்) பலகாரக்கடை, காலணி விற்பனை செய்தல், சிற்றுண்டி, ஜவுளி வியாபாரம், ஊறுகாய் மற்றும் அப்பளம் தயாரித்து விற்பனை செய்தல், கூடை பின்னுதல் போன்ற சிறு வியாபாரம் செய்து தங்களின் பொருளாதாரத்தினை உயர்த்திட சுய உதவிக் குழுவில் உள்ள நபர்களுக்கு சிறு கடன் வழங்கும் திட்டம் மூலம் பின்வருமாறு கடன் வழங்கப்படுகிறது.

| வ. எண். | கடன் தொகை | வட்டி விகிதம் | ஆண்டு வருமான உச்சவரம்பு |
|---|---|---|---|
| 1. | ரூ.1,00,000 வரை (நபர் ஒருவருக்கு) | 7% | கிராமப்புறங்களுக்கு ரூ.98,000 நகர்ப்புறங்களுக்கு ரூ1,20,000 |
| 2. | ரூ.1,50,000 வரை (நபர் ஒருவருக்கு) | ஆண்களுக்கு 10% பெண்களுக்கு 8% | ரூ.1,20,000 மேற்பட்டு ரூ.6,00,000 வரை (கிராம மற்றும் நகர்ப்புறங்கள்) |

இத்திட்டத்தின் கீழ் **2017–2018** ஆம் ஆண்டில் சுய உதவிக் குழுக்கள் மூலம் **5,561** பயனாளிகள் பயனடையும் வகையில் ரூ.**2,250.39** இலட்சம் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

### 22.1.3 கல்விக் கடன்

அரசு / அரசால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் கல்வி நிறுவனங்களில் தொழிற் கல்வி மற்றும் வேலைவாய்ப்பு பட்டப்படிப்புகள் பயிலும் சிறுபான்மையின மாணவ,

மாணவியருக்கு பின்வருமாறு கல்விக் கடன்கள் வழங்கப்படுகின்றன.

| வ. எண். | கல்விக் கடன் தொகை | பெற்றோரது ஆண்டு வருமான உச்சவரம்பு | வட்டி விகிதம் |
|---|---|---|---|
| 1. | (உள்நாட்டில் கல்வி பயில) ஒரு கல்வியாண்டிற்கு ரூ.4 இலட்சம் வீதம் அதிகபட்சம் 5 ஆண்டுகளுக்கு ரூ.20 இலட்சம் | கிராமப்புறங்களுக்கு ரூ.98,000 நகர்ப்புறங்களுக்கு ரூ.1,20,000 | 3% |
| | | ரூ.1,20,000 மேற்பட்டு ரூ.6,00,000 வரை (கிராம மற்றும் நகர்ப்புறங்கள்) | மாணவர்களுக்கு 8%, மாணவியருக்கு 5% |
| 2. | (வெளிநாடுகளில் கல்வி பயில) ஒரு கல்வியாண்டிற்கு ரூ.6 இலட்சம் வீதம் அதிகபட்சம் 5 ஆண்டுகளுக்கு ரூ.30 இலட்சம் | கிராமப்புறங்களுக்கு ரூ.98,000 நகர்ப்புறங்களுக்கு ரூ.1,20,000 | 3% |
| | | ரூ.1,20,000 மேற்பட்டு ரூ.6,00,000 வரை (கிராம மற்றும் நகர்ப்புறங்கள்) | மாணவர்களுக்கு 8%, மாணவியருக்கு 5% |

## 23. தமிழ்நாடு வக்ஃப் வாரியம்

வக்ஃப் சொத்துக்களை சரியான முறையில் பராமரிப்பதற்காகவும், வக்ஃப் தொடர்பான அலுவல்களை நிர்வகிப்பதற்காகவும் **1995** ஆம் ஆண்டு வக்ஃப் சட்டம் **(**மத்திய அரசு சட்டம் **43/1995)** இயற்றப்பட்டு **01.01.1996** முதல் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது**.** இச்சட்டத்தில் உள்ள அறிவுரைகளின்படி தமிழ்நாடு வக்ஃப் வாரியம் அமைக்கப்பட்டு முறையாக **5** ஆண்டுகளுக்கு ஒரு முறை திருத்தியமைக்கப்படுகிறது**. 2017** ஆம் ஆண்டில் இவ்வாரியத்திற்கு **11** உறுப்பினர்கள் நியமனம் செய்யப்பட்டு திருத்தியமைக்கப்பட்டது**.** வாரியத்தின் தலைவராக திரு**.** A. அன்வர் ராஜா அவர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளார்**.**

**2013** ஆம் ஆண்டில், வக்ஃப் சட்டம் **1995–**க்கு சில திருத்தங்கள் செய்யப்பட்டு, இதில் வக்ஃப் சொத்துக்களை ஆக்கிரமிப்பிலிருந்து மீட்டல், விற்பனை மற்றும் தானம் செய்வதற்கு தடை விதித்தல், மேலும் அச்சொத்துக்கள் மேம்பாடு அடைய வழி வகுத்தல் போன்ற சில முக்கிய இனங்களில் சிறந்த முறையில் தீர்வு காணும் வகையில் புதிய அம்சங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன**.** இந்த திருத்தப்பட்ட

சட்டத்தின்படி வக்ஃபுகள் மற்றும் வக்ஃப் சொத்துக்கள் தொடர்பாக எழும் பிரச்சனைகளுக்குத் தீர்வு காணும் பொருட்டு மாநிலம் முழுவதற்குமான தமிழ்நாடு வக்ஃப் தீர்ப்பாயம் சென்னையில் அமைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் உள்ள வக்ஃப் சொத்துக்களை முழுமையாக அளவை செய்து கணக்கிடுவதற்கு நில அளவை மற்றும் நிலவரித்திட்ட ஆணையர் தலைமையில் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதுவரை 19 மாவட்டங்களில் உள்ள 1,679 வக்ஃப் சொத்துக்கள் நில அளவை செய்யப்பட்டுள்ளன.

## 23.1 நிர்வாக மானியம்

வக்ஃப் நிறுவனங்களிடமிருந்து பெறப்படும் சகாயத் தொகை வருவாயிலிருந்து தமிழ்நாடு வக்ஃப் வாரிய நிர்வாகச் செலவுகளை எதிர்கொள்ள இயலாமல் பற்றாக்குறை ஏற்படுகிறது. தமிழக அரசு இப்பற்றாக்குறையை ஈடு செய்ய நிர்வாக மானியம் வழங்கி வருகிறது. தமிழ்நாடு வக்ஃப் வாரியத்திற்கு வழங்கப்படும் ஆண்டு நிர்வாக மானியத்தினை தமிழக அரசு 2017–2018 ஆம் ஆண்டு முதல் ரூ.1 கோடியிலிருந்து ரூ.2 கோடியாக

உயர்த்தி உள்ளது. 2018—2019 ஆம் ஆண்டிற்கு தமிழ்நாடு வக்ஃப் வாரியத்திற்கு அரசு நிர்வாக மானியமாக ரூ.2 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது.

## 23.2 உலமா ஓய்வூதிய திட்டம்

1981 ஆம் ஆண்டு முதல் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வரும் உலமா ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டிலுள்ள வக்ஃப் நிறுவனங்களில் பணியாற்றி ஓய்வு பெற்ற வறிய நிலையில் உள்ள பேஷ் இமாம், மோதினார், அரபி ஆசிரியர் மற்றும் முஜாவர் ஆகியோருக்கு ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் உலமா ஓய்வூதியம் பெறுவதற்கு 60 வயது நிரம்பிய மற்றும் 20 ஆண்டுகள் பணியாற்றியவர்கள் தகுதியுள்ளவர்களாவர். 2016—2017 ஆம் ஆண்டு முதல் உலமா ஓய்வூதியம் மாதமொன்றுக்கு ரூ.1,000—லிருந்து ரூ.1,500 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

## 23.3 மணவிலக்குப் பெற்ற முஸ்லிம் பெண்களுக்கான வாழ்க்கைச் செலவு மானியம்

முஸ்லிம் பெண்கள் (மணவிலக்கில் உரிமை பாதுகாப்பு) சட்டம் 1986 பிரிவு 4(2)—ன்படி, மணவிலக்கு பெற்ற முஸ்லிம் பெண்களுக்கு நீதிமன்ற தீர்ப்பின்படி தமிழ்நாடு வக்ஃப்

வாரியத்தால் வாழ்க்கைச் செலவுத் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

**23.4 பழுதுபார்ப்பு மற்றும் புனரமைப்பு மானியம்**

பள்ளிவாசல்கள், தர்காக்கள் மற்றும் இதர வக்ஃப் நிறுவனங்களை பழுது பார்பதற்காகவும், புனரமைப்பதற்காகவும் தமிழ்நாடு அரசு பழுதுபார்ப்பு மற்றும் புனரமைப்பு மானியம் வழங்கி வருகிறது. **2018–2019** ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்திற்கான மானியமாக ரூ.**60** இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**23.5 வக்ஃப் நிறுவனங்களின் பழுதுபார்ப்பு மற்றும் சீரமைப்புப் பணிகளுக்கான தொகுப்பு நிதி**

பள்ளிவாசல்கள், தர்காக்கள் போன்ற வக்ஃப் நிறுவனங்களில் பழுதுபார்ப்பு மற்றும் சீரமைப்புப் பணிகளை மேற்கொள்வதற்கு ரூ.**3** கோடியில் ஒரு தொகுப்பு நிதி (Corpus Fund) உருவாக்கப்பட்டுள்ளது. இத்தொகுப்பு நிதி வக்ஃப் வாரியத்தின் பெயரிலான வங்கிக் கணக்கில் **9.1.2018** முதல் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. ஓராண்டு நிறைவுற்றப்பின் இத்தொகுப்பு நிதியின் மீது பெறப்படும் வட்டித் தொகையினைக் கொண்டு தேவையான வக்ஃப்

நிறுவனங்களில் பழுதுபார்ப்பு மற்றும் சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

### 23.6 காஜிக்களுக்கு மதிப்பூதியம் வழங்குதல்

தமிழ்நாட்டில் பணியாற்றும் மாவட்ட காஜிக்களுக்கு மாதந்தோறும் ரூ.20,000 மதிப்பூதியம் வழங்கப்படுகிறது. இத்திட்டத்திற்காக 2018–2019 ஆம் ஆண்டிற்கு ரூ.67.20 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 24. தமிழ்நாடு மாநில ஹஜ் குழு

### 24.1 குழுவின் அமைப்பு

இந்திய ஹஜ் குழு மற்றும் புதுதில்லி, சிறுபான்மையினர் விவகாரத்துறை அமைச்சகம் ஆகியவற்றின் வழிகாட்டுதலுடன் ஹஜ் புனிதப் பயணத்திற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கும் மற்றும் ஹஜ் பயணிகளின் நலன் குறித்த பணிகளை மேற்கொள்வதற்கும் ஹஜ் குழு சட்டம், 2002 (மத்திய சட்டம் எண்.35/2002)–ன்படி தமிழ்நாடு மாநில ஹஜ் குழு, மூன்று ஆண்டு காலத்திற்கு மாநில அரசால் அமைக்கப்படுகிறது. தமிழ்நாடு மாநில ஹஜ் குழு 12 உறுப்பினர்களைக் கொண்டு தமிழக அரசால் 2017 ஆம்

ஆண்டில் திருத்தியமைக்கப்பட்டது. தமிழ்நாடு மாநில ஹஜ் குழுவின் தலைவராக திரு. அ. அப்துல் ஜப்பார் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

## 24.2 குழுவின் பணிகள்

இக்குழுவின் முக்கியப் பணிகள் பின்வருமாறு:–

1. தமிழ்நாட்டைச் சேர்ந்த பயணிகளிடமிருந்து ஹஜ் பயணத்திற்கான விண்ணப்பங்களைப் பெறுதல், ஹஜ் பயணத்திற்கான நபர்களை கணினி மயமாக்கப்பட்ட குலுக்கல் முறையில் தேர்வு செய்தல்.

2. இந்திய ஹஜ் குழு, மும்பைக்கு செலுத்தவேண்டிய ஹஜ் முன்பணக் கட்டணம், மீதமுள்ள ஹஜ் தொகை, விமானக் கட்டணம் மற்றும் இதர கட்டணங்கள் குறித்த அறிவுரைகளை அவ்வப்போது பயணிகளுக்கு அளித்தல்.

3. இந்திய தூதரகத்தின் ஒருங்கிணைப்போடு மக்கா மற்றும் மதீனாவில் தகுந்த தங்குமிடங்களை தெரிவு செய்வதற்காக அலுவலர் ஒருவரை கட்டடத்

தேர்வுக் குழுவில் சவூதி அரேபியாவிற்கு அனுப்புதல்.

4. தமிழ்நாட்டைச் சேர்ந்த ஹாஜிகள் சவூதி அரேபியாவில் தங்கியிருக்கும் காலத்தில், ஹஜ் பயணிகளின் நலன்களைக் கவனிக்கும் பொருட்டு ஹஜ் தன்னார்வத் தொண்டர்களை அனுப்புதல்.

5. ஹஜ் பயணிகளுக்கு கடவுச் சீட்டுகளைப் பெறுவதற்காக மண்டல கடவுச் சீட்டு அலுவலகங்களுடன் ஒன்றிணைந்து பணிபுரிதல்.

6. ஒவ்வொரு வருடமும் "ஹஜ்ஜும் உம்ராவும்" என்ற கையேட்டை தமிழில் அச்சிட்டு ஹஜ் பயணிகளுக்கு விலையேதுமின்றி வழங்குதல்.

7. சென்னை – ஜித்தா / மதீனா–சென்னைக்கு ஹஜ் விமானங்கள் இயக்கத்தின்போது வெளிமாவட்டப் பயணிகளுக்கு தற்காலிகத் தங்கும் வசதி ஏற்படுத்துதல் மற்றும் தங்குமிடத்திலிருந்து விமான நிலையம் செல்லுதல் மற்றும் திரும்பி வருவதற்கு போக்குவரத்து வசதி அளித்தல்.

8. ஹஜ் பயணத்தின்போது பின்பற்ற வேண்டிய பயண நடைமுறை மற்றும் செயல்முறைகள் குறித்து

தேர்ந்தெடுக்கப்பட்ட பயணிகளுக்கு பயிற்றுவிக்க பல்வேறு மாவட்ட/தாலுக்கா தலைமையகங்களில் புத்தறிவுப் பயிற்சி முகாம்களை நடத்துதல்.

9. மூளைக்காய்ச்சல் தடுப்பூசி போடுவதற்கும் மற்றும் போலியோ சொட்டு மருந்தை ஹஜ் பயணிகளுக்கு அளிப்பதற்கும் பல்வேறு மாவட்டங்களில் முகாம்கள் நடத்துதல்.

10. மக்கா மற்றும் மதினா நகரங்களில் ஹஜ் பயணிகளுக்கு தங்குமிட வசதிகளை ஏற்படுத்துதல்.

11. ஹஜ் பயணத்திற்கான விமான போக்குவரத்து சிறப்பாகவும் வெற்றிகரமாகவும் அமைய மத்திய அரசு, மாநில அரசு, இந்திய ஹஜ் குழு, மும்பை முதலான பல்வேறு நிறுவனங்கள் மற்றும் பிற நிறுவனங்களான ஏர் இந்தியா, சவூதி அரேபியா விமான நிறுவனம், இந்திய விமானங்களின் ஆணைக்குழு, சுங்கம், குடியேற்றம், விமான போக்குவரத்து பாதுகாப்பு நிறுவனம் ஆகியவற்றுடனும் மற்றும் இதர தொண்டு நிறுவனங்களுடனும் சேவைகளை ஒருங்கிணைத்தல்.

12. ஹஜ் பயணம் தொடர்பான இதர இடைநிகழ்வு பணிகள்.

## 24.3 குழுவிற்கான நிர்வாக மானியம்

ஒவ்வொரு ஆண்டும் மாநில ஹஜ் குழுவிற்கு நிர்வாக மானியத்தை தமிழக அரசு வழங்கி வருகிறது. பணியாளர்களுக்கு ஊதியம் அளித்தல், சொத்து வரி, மின்சார செலவினம், குடிநீர் மற்றும் வடிகால் வரி முதலிய நிருவாக செலவினங்களை தமிழக அரசால் அளிக்கப்படும் மானியத்திலிருந்து தமிழ்நாடு மாநில ஹஜ் குழு மேற்கொள்கிறது. 2013–2014 ஆம் ஆண்டு முதல், தமிழக அரசு இம்மானியத்தை ரூ.20 இலட்சத்திலிருந்து ரூ.30 இலட்சமாக உயர்த்தி வழங்கி வருகிறது. 2018–2019 ஆம் ஆண்டிற்கு நிர்வாக மானியமாக ரூ.30 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 24.4 ஹஜ் தன்னார்வத் தொண்டர்கள் மற்றும் கட்டடத் தேர்வு குழுவில் உறுப்பினரை அனுப்புவதற்கு மானியத்தை ஒப்பளிப்பு செய்தல்

ஹஜ் பயணிகளுக்கு சேவையாற்ற ஹஜ் தன்னார்வத் தொண்டர்களை சவூதி அரேபியாவிற்கு அனுப்புவதற்கும், கட்டடங்களைத் தெரிவு செய்ய கட்டடத்தேர்வுக் குழுவில்

பிரதிநிதியை சவூதி அரேபியாவிற்கு அனுப்புவதற்குண்டான செலவினத்தை மேற்கொள்ளவும், அரசு, தமிழ்நாடு மாநில ஹஜ் குழுவிற்கு மானியங்களை அளிக்கிறது. இத்திட்டத்திற்காக 2018–2019 ஆம் ஆண்டில் ரூ.10.29 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**முடிவுரை**

தமிழ்நாட்டிலுள்ள பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையின மக்கள் கல்வி, சமூக மற்றும் பொருளாதார நிலைகளில் உயர்வடைய பல்வேறு திட்டங்கள் மாநிலத்தில் செவ்வென சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இவ்வகுப்பினரின் சீரிய நலனைக் கட்டிக் காப்பதுடன் அவர்களின் முன்னேற்றத்திற்கான அனைத்து முயற்சிகளையும் இவ்வரசு தொடர்ந்து மேற்கொள்ளும்.

**சீ. வளர்மதி**
**பிற்படுத்தப்பட்டோர் மற்றும்**
**சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர்**


# <u>இணைப்பு</u>

## 2018–2019 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீடு

(ரூபாய் இலட்சத்தில்)

| | வருவாய் | மூலதனம் | கடன் | மொத்தம் |
|---|---|---|---|---|
| தலைமைச் செயலகம் | 556.82 | –– | 0.01 | 556.83 |
| வக்ஃப் மற்றும் ஹஜ் குழு | 698.29 | –– | –– | 698.29 |
| பிற்படுத்தப்பட்டோர் நலன் | 47068.12 | 842.81 | –– | 47910.93 |
| மிகப்பிற்படுத்தப்–பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன் | 48208.17 | 1167 .53 | –– | 49375.70 |
| தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் | 123.38 | –– | –– | 123.38 |
| மாநில சிறுபான்மையினர் ஆணையம் | 62.65 | –– | –– | 62.65 |
| சிறுபான்மையினர் நலன் | 1046.77 | 267.72 | –– | 1314.49 |
| **மொத்தம்** | **97764.20** | **2278.06** | **0.01** | **100042.27** |

# இட ஒதுக்கீடு விவரம்



## மாவட்ட வாரியான விடுதிகள் விவரம் (1343)





மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 01.03.2018 அன்று புதிதாகக் கட்டப்பட்ட பள்ளி மற்றும் கல்லூரி விடுதிக் கட்டடங்களை திறந்து வைத்தார்கள்.